# அரசு ஊழியர்

**மாத இதழ்**

**2023 ஆகஸ்ட்**

**மலர்:44 இதழ்:08**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**

அச்சிட்டு வெளியிடுபவர்: **மு.அன்பரசு**

ஆசிரியர்: **ஆ.செல்வம்**

ஆசிரியர் குழு:
**மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்**

வரைகலை: கார்ட்டுன்வாசி

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178

இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி

**முகவரி:**
பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

**அச்சகம்:**
சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200
தனி இதழ் : ரூ.20



இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.


# உள்ளே...


1. **மேகம் கருக்குது... பிழை வர பாக்குது..!** *தலைவர் மடல்* ....4
2. **ஏக்கம் மட்டும் போதாது; போராடாமல் எதுவும் கிடைக்காது!** பொதுச் செயலாளர் மேசையிலிருந்து....7
3. **நரேந்திர தபோல்கரின் நினைவலைகள்** ....9
4. **கவித்துவத்துடன் கலைஞர் நூலகம்** ....11
5. **டி.எல்.... இணையிலா ஈரெழுத்துச் சொல்** ....13
6. **மக்களை வஞ்சிக்கும் புதிய கல்விக் கொள்கை** ....14
7. **பொது சிவில் சட்டம் தேவைதானா?**....17
8. **நிலவில் மீண்டும் களம் இறங்கும் சந்திரயான்!** ....22
9. **காலத்தை வென்ற சிவப்பு கவிஞன் பாப்லோ நெருடா** ....26
10. **ஒன்றிய அரசின் பாராமுகம்; மாற்றுத்திறனாளிகள் ஆவேசம்!**....27
11. **"விடியலைக் காண்பதற்கு வேறென்ன வழி நமக்கு?"** ....28
12. **தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட மையங்கள் நடத்திய ஆர்பாட்டங்கள் மற்றும் கவன ஈர்ப்பு பேரணிகள்** ....30
13. **சோசலிசமே மாற்று மற்றதெல்லாம் ஏமாற்று!** ....32

தலைவர் மடல்

# மேகம் கருக்குது...
# பிழை வர பாக்குது..!

தேர்தலுக்கு தேர்தல் மட்டுமே கண்ணுக்குத் தெரியும் தெய்வப் பிறவிகளாக அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் மாற்றப்பட்டு வருவதைத்தான் ஆட்சியாளர்களின் அலட்சியமும் எதிர்கட்சிகளின் ஆதரவும் உணர்த்தி வருகின்றன. தேர்தலின்போது தெய்வங்களாகத் தெரியும் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தேர்தலுக்குப் பிறகு வெறும் கற்சிலைகள்தான் என்பது ஒவ்வொரு தேர்தலுக்குப் பிறகும் நாம் உணர்ந்துகொள்ளும் பாடங்களாக இருக்கின்றன.

போராட்டங்கள், பேச்சுவார்த்தைகள் இவற்றினூடே அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தங்களுடைய உரிமைகளுக்காக வானத்துக்கும் பூமிக்கும் இடையே பந்தாடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்பிக்கைதான் வாழ்க்கை என்று ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும் நாம் சில கட்சிகளை ஆதரிக்கிறோம். நாம் கேட்காமலேயே நம்முடைய உரிமைகளை வாரி வழங்கும் வள்ளல்களாக எதிர் வரிசையில் உள்ளபோது உரத்து முழங்கும் அரசியல்வாதிகள்தான் தங்களுக்கு ஆட்சிக்கட்டில் கிடைத்தபின்பு அதில் படுத்துக்கொண்டு குறட்டை விட்டு உறங்கும் கும்பகர்ணன்களாகி விடுகின்றனர்.

''எங்கள் கட்சி ஆட்சிக்கு வந்ததும் 100 நாட்களுக்குள் ஊழலை ஒழிப்போம், சுவிஸ் வங்கியில் இருக்கும் இந்திய அரசியல்வாதிகள், பெரும்பணக்காரர்களின் கறுப்புப்பணத்தை மீட்டு ஒவ்வொரு இந்தியனின் வங்கிக் கணக்கிலும் ரூ.14 லட்சம் போடுவேன் என்று சொல்லிவிட்டு ஆட்சிக்கு வந்து 9 ஆண்டுகள் ஆனபின் அதெல்லாம் தேர்தல்காலத்துப் பொய்கள் அதை நீங்கள் நம்பியிருந்தால் நீங்கள்தான் அப்பாவிகள்'' என்று சிரிக்கும் அரசியல்வாதிகளைப் பார்த்து நாம்தான் வெட்கித் தலைகுனிய வேண்டியுள்ளது. இதைவிட பெரிய பொய் இருக்குமா? என்று கேட்பவர்களுக்கு தமிழ்நாட்டில் பதில் இருக்கு. சென்ற தேர்தலின்போது அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் அமல்படுத்தப்படும் என்று மேடைதோறும் அடித்துப்பேசிய முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வாக்குறுதிகள் மௌனங்களால் மறக்கடிக்கப்பட முயற்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவில் மற்ற சில மாநிலங்களால் திரும்பக் கொண்டுவர முடிந்த பழைய ஓய்வூதியத் திட்டத்தை மடைமாற்றி திசை திருப்பும் வேலைகள்தான் தமிழ்நாட்டில் நடந்து வருகின்றன.

அரசாங்கத்தின் திட்டங்கள், நடவடிக்கைகள், திரைமறைவு நாடகங்கள் அனைத்தையும் அறிந்தவர்களாக மட்டுமல்ல அரசுக்கும் மக்களுக்கும் பாலமாகவும் இருந்து வரும் அரசு ஊழியர்களை நவீனமயத்தின் அரசியல்வாதிகள் துண்டித்துவிடத் துடிக்கிறார்கள். ரத்தம் சிந்தி பெற்ற உரிமைகள், வியர்வை வழிய நடத்திய போராட்டங்கள் போன்றவற்றை, தொடர்ந்து வீசப்படும் அடக்குமுறைகளாலும் ஆட்குறைப்பு, சம்பளக்குறைப்பு, சலுகைகள் வெட்டு போன்ற நடவடிக்கைகளாலும் ஒழித்துக்கட்டப் பார்க்கிறார்கள். ஒரேயடியாக முடியாவிட்டாலும் கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பித்து மொத்தமாக அரசு ஊழியர்களை முடித்துக் கட்டிவிட மத்திய அரசும் சரி (பல) மாநில அரசுகளும் சரி முனைப்புடனேயே இருக்கின்றன. அரசு ஊழியர் வர்க்கத்தின் கடைசி ஊழியன் இருக்கும் வரை

இவர்களுடைய கனவு பலிக்காது. அதனால்தான் நீண்டநெடிய வரலாற்றை கொண்ட ஊழியர் இயக்கத்தை வரலாற்றிலிருந்து பிரிக்கப்பார்க்காமல் ஒழிக்கப் பார்க்கிறார்கள். அப்படி ஒருநிலை தோன்றுமானால் அந்த நாளில் இந்திய நாடு சர்வாதிகார நாடாக நிச்சயம் மாறிவிடும்.

இன்றைய ஆட்சியாளர்கள் என்பவர்கள் நேற்றைய மற்றும் நாளைய அரசியல்வாதிகள் என்பதை நாம் அவ்வப்போது மறந்து போய்விடுகிறோம். அவர்கள் மத்தியில் இருந்தாலும் மாநிலத்தில் இருந்தாலும் அவர்களின் சிந்தனைப்போக்கு சிறிதளவும் மாறாது என்பதற்கு சென்ற தேர்தல் மட்டுமல்ல ஒவ்வொரு தேர்தலிலும் நமக்கு கிடைக்கும் அனுபவங்களும் சாட்சியங்களாக உள்ளன. இது இனி வரும் தேர்தலில் தொடரக்கூடாது. அது தொடராமல் இருக்க அரசு ஊழியர்கள் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

நாம் அரசு ஊழியர்களாக மட்டும் சிந்திக்கவில்லை. இந்த சமுதாயத்தில் நாமும் ஒரு அங்கம். பெரும்பான்மை மக்களில் நாமும் ஒரு பிரிவினர். உடலுழைப்புத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச தினக்கூலி, பட்டப்படிப்பு முடித்துவிட்டு வேலையற்று காத்திருக்கும் இளைஞர்களுக்காக வேலைவாய்ப்புகள், விவசாயிகளின் வறுமையுடன் கூடிய வேதனையான வாழ்க்கைக்கு ஒரு நிரந்தர தீர்வு போன்றவை குறித்தும் நாம் கவலை கொள்ள வேண்டியிருக்கிறது. ஏழைகள் உபயோகப்படுத்தும் சமையல் எரிவாயுவில் தொடங்கி, ரேஷன் பொருட்கள் வரை தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. மீனவர் பிரச்னை, மாணவர் பிரச்னை, காவிரிப் பிரச்னை, மேகதாட்டுப் பிரச்னை என தமிழக மக்களின் நலன்களை புறந்தள்ளும் ஒன்றிய அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் நாம் நமது குரல்களை இன்னும் உரத்து எழுப்ப வேண்டும். இந்த ஆட்சியாளர்கள் ஏழைகளின் தோழர்களுமல்ல விவசாயிகளின் காவலர்களும் அல்ல, அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நண்பர்களும் அல்லர். இவர்கள் வியாபாரிகள். ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஆசைகாட்டி அதன்பிறகு அரசாங்க கஜானாவை சுரண்டி சுரண்டி நாட்டையே போண்டியாக்கிவிடும் நாசகாரர்கள். இவர்களுக்கு அரசியலமைப்புச் சட்டம் கொடுத்துள்ள பெயர் மாண்புமிகு ஆட்சியாளர்கள். இத்தகைய நபர்கள் மத்தியில் இருந்தாலும் மாநிலத்தில் இருந்தாலும் அவர்களின் சிந்தனைப்போக்கு மக்கள் நலன் என்பதாக சிறிதளவும் இருக்காது என்பதும் மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் தப்பித்தவறி ஏதேனும் நடந்துவிட்டால் அது எதிர்கட்சிகளின் வாயை அடைப்பதற்காக கொண்டுவரப்பட்டதேயன்றி உண்மையான அக்கறையால் அல்ல என்பதை இனியாவது புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழக அரசில் போதிய திட்டமிடுதல் கடைபிடிக்கப்படாததாலும், தொழில் வளர்ச்சியில் அக்கறை செலுத்தாததாலும், வளர்ச்சிக்கும் வருவாய்க்குமான திட்டங்கள் வகுக்கப்படாததாலும், அரசு காஜானா வழித்தெடுக்கப்பட்டுவிட்ட நிலையில், வெறும் கையில் முழம் போடும் பசப்பும், பாசாங்கும்தான் நடந்து கொண்டிருக்கிறது. அரசு நிர்வாகம் டாஸ்மாக் விற்பனையை வைத்துத்தான் நடைபெறுகிறது என்ற நிதர்சனத்தை டாஸ்மாக் கடைகளை முற்றிலும் இழுத்து மூட முடியாத நிலை மூலம் திமுக அரசு உணர்த்தியுள்ளது. பொருளாதார முன்னேற்றம், பெண்கள் முன்னேற்றம், ஏழைகள் முன்னேற்றம் போன்ற திட்டங்கள் அனைத்தும் காகிதப் பூக்களாகவே உள்ளன.

நாமும் நம்மைப்போன்ற பல இயக்கங்களும் அனைத்தையும் எதிர்த்து நிற்பதால் அரசு ஊழியர் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இயக்கத்திலிருந்து நம்மை பிரித்து எடுக்க பல சூழ்ச்சிகள் செய்து வருகிறார்கள். அரசாங்கம் என்பது மக்களுக்கானது என்பது விளம்பர பேனராக நிறுத்தப்பட்டு, உள்ளே சுயநலம், அதிகாரம் போன்றவற்றுக்கான வெட்டுக்குத்து சம்பவங்கள் நடந்து

கொண்டிருக்கின்றன. ஆக, ஆட்சியாளர்களோ அரசியல்வாதிகளோ ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் எதிர்காலத்தைப் பற்றியோ முன்னேற்றத்தைப் பற்றியோ சமுதாய அக்கறையோடு அவற்றை அணுகவில்லை என்பதிலிருந்து அவர்கள் நம்மிடம் கூறுபவை அனைத்தும் பசப்பு வார்த்தைகளே அன்றி வேறில்லை என்பதையும், ஓட்டுச்சீட்டு என்ற ஒரு காரணத்திற்காக நம் முதுகை வருடி சுண்ணாம்பு தடவ காத்திருக்கிறார்கள் என்பதையும் நாம் இனியும் உணராதிருப்பது வரலாற்றுப்பிழையை ஏற்படுத்தி விடும்.

புதிய பென்சன் மற்றும் பறிக்கப்பட்ட உரிமைகளை வழங்காதிருத்தல், தனியார் மய நடவடிக்கைகள், போன்றவற்றின் மூலம் அரசு ஊழியர் என்ற ஆலமரத்தின் வேரையும் தனியார் மய நடவடிக்கைகள் மூலம் இந்த இயக்கம் என்ற ஆலமரத்தின் விழுதுகளையும் வீழ்த்திவிட நினைக்கிறார்கள். நாம் இனிமேலும் இருக்கின்ற இடத்திலேயே இருந்து கொண்டு இயக்கம் வீழ்ந்துவிட துணை நிற்காமல் இருக்கையிலிருந்து எழுந்து வந்து, இழந்து நிற்கும் உரிமைகளை மட்டுமல்ல, அதிகாரவர்க்கம் வீழ்த்திவிடத்துடிக்கும் வரலாற்றையும் காக்கும் பெரும் பொறுப்பில் நம்மை ஈடுபடுத்திக் கொள்வோம். இதற்காக நமது இயக்கம் முன்னெடுத்து நடத்திக் கொண்டிருக்கும் இயக்க நடவடிக்கைகளில் தன்னெழுச்சியாக கலந்து கொள்ள வேண்டுவதுடன், பக்கத்து இருக்கையில், பக்கத்து அறையில், பக்கத்து அலுவலகத்தில் உள்ள அரசு ஊழியர்கள் அனைவரையும் இயக்கப் போராட்டங்களில் பங்கெடுக்க வைப்பதை நமது கடமையாக நிகழ்த்தி இழந்து விட்ட உரிமைகளை மீட்போம், இருக்கின்ற உரிமைகளைக் காப்போம், புதிய உரிமைகளை போராடிப் பெறுவோம்.

2024 மக்களவைத் தேர்தலுக்கான அரசியல் நாடகங்கள் தொடங்கியுள்ளன. ஒவ்வொரு அரசியல் கட்சியும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களிடம் இந்தமுறை எந்தப் பொய்களைச் சொல்லி வாக்குகளைச் சுரண்டலாம் என்று திட்டங்கள் தீட்டி வருகின்றன. அரசியல் வானில் தேர்தல் மேகங்கள் கருக்க ஆரம்பித்துள்ளன. பொய் வாக்குறுதிகள் என்ற மழையில் (மழையில் அல்ல பிழையில்) நம்மை நிர்வாணமாக்கி இருக்கின்ற கோவணத்தையும் உருவிக் கொள்ள தயாராகிவரும் கொடூரர்களுக்கு தக்க பாடம் புகட்ட தீர்க்கமான திட்டங்களை இப்போதிலிருந்தே தீட்டுவோம் தோழமைகளே. ●

## சூடா ஒரு கோப்பை சூப்

### நடுமைச் சாதி

அடிமைச் சங்கிலி
தொப்புள் கொடியாய்
அணிந்து பிறந்தவன்
அரசு ஊழியன்!

உடைமைச் சங்கிலி
உதிரப் போரிடும்
உழைப்புச் சாதியின்
உரிமைச் சமரில்

நடுமைச் சாதியாம்
நாமும் சேர்கையில்
நாபிக் கொடிகளாம்
’விதிகள்’ அறுந்திடும்!

விடிவுச் செங்கதிர்
விரைவினில் தோன்றும்!
வெற்றிச் சங்கொலி
விண்ணையும் தீண்டும்!

– கவிஞர் தணிகைச் செல்வன்

# ஏக்கம் மட்டும் போதாது; போராடாமல் எதுவும் கிடைக்காது!

45 ஆண்டுகளுக்குப் பிறகு பெருந்திரள் வறுமை நிலவும் நாடு என்று அழைக்கப்படும் நிலைமைக்கு இந்தியா ஆகியுள்ளது. மக்கள் மீது தொடர்ந்து சுமையேற்றி வரும் விலைவாசி தாங்க முடியாத சுமையாக மற்றொரு உயர்வை தொடங்கியுள்ளது. ஏற்கனவே விஷமாய் ஏறிவரும் விலைவாசியோடு தக்காளி காய்கறிகள் போன்றவற்றின் விலை ஏற்றங்கள் இனி பொது மக்கள் உணவுக்காக மட்டுமே வருவாயை ஈட்டும் நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. விலையேற்றம் என்ற நடப்பு காலகட்டத்தில் போக்குவரத்துச் செலவுகள் சாதாரணமாக மக்களின் வாழ்வை மேலும் மோசமாக்கி வருகிறது.

சர்வதேச, தேசிய, அரசியல் நிலைமைகள் காரணமாக மாநில அரசு ஊழியர்களின் போராட்டங்கள் தினம்தினம் விரிவாகி வருகின்றன. ஏதோ ஒரு விதத்தில் ஒவ்வொரு பிரிவினருக்கும் தங்களது போராட்டங்களை நடத்திட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. தற்போது அரசு ஊழியர்கள் நடத்திவரும் போராட்டங்களில் பொதுமக்கள் குறிப்பிடத்தக்க அளவில் பங்கேற்று வருகின்றனர். அது நல்ல விளைவுகளுக்கான அறிகுறி. நமது போராட்டங்களின் வெற்றி என்பது நமது உரிமைகளை வென்றெடுப்பது மட்டுமன்றி, நமது அமைப்பையும் அது வலுப்படுத்தும். சில சமயங்களில் இலக்கை எய்துவதில் தாமதம் இருக்கலாம். ஆனால் ஊழியர்கள் எவ்வளவு பங்கேற்றனர். எவ்வளவு நீண்ட காலம் போராட்டம் தொடர்கிறது. மக்களிடையே அது எந்த வகையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன ஆகியவற்றை சார்ந்தே உண்மையான வெற்றி இருக்கிறது.

தங்களது சொந்த நலன்களுக்காக சங்கம் இல்லை என்றும், ஊழியர்களின் முன்னேற்றத்திறகாக உள்ளது என்றும் ஒவ்வொரு முன்னணி தோழரும் உணர வேண்டும். அரசு நிர்வாகம், தொழில், வர்த்தகம் மற்றும் இதர பொருளாதார நடவடிக்கைகள் தொழிலாளிகள் அல்லது அவர்களது பிரதிநிதிகளால் மேலாண்மை செய்யப்படும் முதலாளித்துவ சமூகத்தில், இந்த அமைப்பு முறை, ஒடுக்குமுறையாலும், சுரண்டலாலும் நிரம்பியிருக்கும். இந்தியாவிலும் இதுவே உண்மை. நிர்வாகம், காவல்துறை, இராணுவம் மற்றும் நிதி அமைப்புகள் ஆகியவையும் நடுநிலைமை பராமரிப்பதில்லை. மாறாக அவை அதிகார மையங்களையும், அதிகார வர்க்கங்களையும் ஆதரிக்கின்றன. செய்தி இதழ்களோ, தொலைகாட்சிகளோ எதுவாயிருந்தாலும் ஊடகங்கள் அதிகார மைய மனிதர்களாலோ அவர்களது பிரதிநிதிகளாலோ நடத்தப்படுகின்றன. அவை எப்போதும் உழைக்கும் மக்களுக்கு எதிரான நிலையையே எடுக்கின்றன. இந்த சூழ்நிலைகளில், சிறப்பு இயல்பு கொண்ட அமைப்புகள் சாதி, நிறம், மதம் எதுவுமின்றி கட்டமைக்கப்படுவது அவசியமாகும். எனவே தொழிலாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் தற்காலிக நிவாரணங்கள் சிலவற்றை பெற்றுத் தரும் அமைப்பாக

தொழிற்சங்கங்களை எவரும் எண்ண முடியாது. மாறாக, தொழிலாளர்கள், ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன்களை பாதுகாப்பது மட்டுமின்றி, பொது மக்களின் நலன்களையும் பாதுகாப்பதும் தொழிற்சங்கங்களின் நோக்கமாகும்.

சங்கங்களின் சிறப்பு பங்கேற்பின் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்திருக்கிறோமோ என்பதே நமது கேள்வி. அந்த இலக்குகளை அடைய எந்த நடவடிக்கையாவது எடுத்திருக்கிறோமா? நடப்பு சங்கத்தை நடத்துவதற்கு நடைமுறையில், பல தடைகளை நாம் எதிர்கொள்கிறோம். முக்கியமாக, சங்கத்திற்கு நமது உண்மையான பங்களிப்பு தொடர்பாகவும், இலக்கை எய்துவது தொடர்பாகவும், சாதாரண உறுப்பினர்களிடம் மட்டுமின்றி நிர்வாகிகளிடமும் பங்களிப்பு இல்லாமல் இருக்கிறது. இந்த வகையான புரிதல் இல்லாமை சில தவறுகளையும், இழப்புகளையும் உண்டாக்குகிறது. இறுதியாக, பெரும்பாலும் பொருளாதார வாதங்களிலேயே நாம் அமிழ்ந்துவிடுகிறோம். இந்த வகையில் குறைகளை சரி செய்ய, நமது அமைப்பின் அடித்தளங்களை நாம் வலுப்படுத்தியாக வேண்டும்.

வலுவான அடித்தளமின்றி, மகத்தான கட்டிடத்தை கட்ட முயாது. வேரிலிருந்து நமது அமைப்பை நாம் வலுப்படுத்த வேண்டும். நமது இலக்குகளை அடைய தொடர்ந்த மற்றும் விடாப்பிடியான முயற்சி தேவை. இந்திய அரசும், பெரும்பாலான மாநில அரசுகளும் நிதி மூலதன அமைப்புகள் கட்டளையிடும் புதிய தாராளமய கொள்கைகளை பின்பற்றுகின்றன. விளைவாக ஊழியர்களின் ஓய்வூதியம் உட்பட கடும் உழைப்பினால் எட்டப்பட்ட உரிமைகள் முதலாளித்துவ சக்திகளால் கொள்ளையடிக்கப்படுகின்றன. முறையான ஊதியங்களை நிரந்தர ஊழியர்களுக்கு வழங்குவதற்குப் பதிலாக அரசுப் பணிகளில் ஒப்பந்த / தற்காலிக / தினக்கூலி ஊழியர்களை நியமிக்கும் முறை வளர்த்தெடுக்கப்படுகிறது. மக்கள் திரளிடையே புதிய தாராளமய கொள்கைகளை அமல்படுத்துவதற்கான கருவியாக வகுப்புவாதம் இருக்கிறது. அரசாங்கத்தில் தொழிலாளர் விரோத கொள்கைகளுக்கு எதிராக போராடுவதற்கான உறுதி உழைக்கும் வர்க்கத்திடம் எங்கெல்லாம் இருக்கிறதோ, அங்கெல்லாம் மக்களின் ஆதரவு இருந்த அனுபவத்தை நாம் பெற்றுள்ளோம். எனவே, வரலாற்றுபூர்வ கடந்த காலம் கொண்ட நமது சங்கம் ஊழியர்களின் நலன்களை பாதுகாக்க அடிப்படையான, உறுதியான போராட்டத்திற்கு ஊழியர்களை அணிதிரட்ட வேண்டும். பரந்துபட்ட வகையில் அத்தகைய போராட்டத்திற்காக நாம் ஊழியர்களை தயார்படுத்த வேண்டும்.

எதிர் வரும் காலங்கள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து உழைக்கும் மக்களின் அரசாங்கத்துடனான போராட்டங்கள் மிகவும் சவாலானவைகளாக இருக்கும். அவற்றை எதிர் கொள்வதற்கு நாம் இப்போதிலிருந்தே நம்மை தயார் படுத்திக்கொள்ள வேண்டும். விடாப் பிடியான போராட்டங்களே நம்முடைய வெற்றிகளை உறுதிப்படுத்தும்.


ஒரு சுரண்டலுமின்றி
உழைப்பவர்க்கு ஒரு
வாழ்க்கை வேண்டுமென்ற
ஏக்கம் மட்டும் போதாது
இயக்கமாக போராடு
போராட்டமில்லாமல்
எதுவும் புதிதாக கிடைக்காது! ●

# நரேந்திர தபோல்கரின் நினைவலைகள்

**- பெரணமல்லூர் சேகரன்**


நரேந்திர தபோல்கர் 1945ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1ஆம் நாள் பிறந்தார். இவர் மராட்டிய அந்தா ஷ்ரத்தா நிர்மூலன் சமிதி என்ற மூடநம்பிக்கை எதிர்ப்பு இயக்கத்தை 1989-ல் நிறுவி, தொடர்ந்து நடத்தியவர். தபோல்கர் அந்த இயக்கத்தின் மூலமாக பல போலி சாமியார்களை, பாபாக்களை, மந்திரவாதிகளை மக்கள் முன் அம்பலப்படுத்தி உள்ளார். தற்போது கிறிஸ்தவ அடிப்படைவாதிகளால் அச்சுறுத்தலுக்குள்ளாகி வெளிநாட்டில் தஞ்சமடைந்துள்ள இந்திய பகுத்தறிவாளர் சங்கத்தின் தலைவர் சணல் இடமருகுவின் உற்ற நண்பரும் கூட.

மக்களை முட்டாள்களாக்கும் சடங்குகளையும், மூட நம்பிக்கைகளையும் எதிர்த்து தொடர்ந்து போராடி வந்த நரேந்திர தபோல்கர் அடிப்படையில் ஒரு மருத்துவர். சமூகத்தை அறிவியல் மனப்பான்மையுடன் வளர்ப்பதில் அவரது நிர்மூலன் சமிதி முன்னணியில் நின்றது. சிவசேனா, பிஜேபி போன்ற கட்சிகள் வீறு கொண்டு எழத் துவங்கிய 90-களில், மராட்டிய மாநிலத்திலேயே இந்து மத மூடநம்பிக்கைகளுக்கு எதிராக பேசுவது அப்படி ஒன்றும் எளிதல்ல. தபோல்கர் அதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் மக்கள் மன்றத்தில் சாமியார்களை, மோசடிகளை தொடர்ந்து அம்பலப்படுத்தி வந்தார்.



மராட்டிய மாநில அரசு, மூடநம்பிக்கைகள் மற்றும் போலி சாமியார்களுக்கெதிராக ஒரு சட்டத்தை இயற்றியுள்ளது. அத்தகைய சட்டத்தை இயற்ற மாநில அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் விதமாக பல்வேறு போராட்டங்களை இவர் தொடர்ந்து நடத்தி வந்தார். சாதனா என்ற முற்போக்கு பத்திரிகையையும் நடத்தி வந்தார்.

தெய்வங்களுக்கு காணிக்கை என்ற பெயரில் செல்வத்தை நாசமாக்குவது மற்றும் தெய்வங்களை நீரில் கரைத்து



பொதுப் பயன்பாட்டிற்கான தண்ணீரை மாசுபடுத்துவது போன்றவற்றுக்கு எதிராகவும் பல இயக்கங்களை எடுத்திருக்கிறார். எனவே இவருக்கு எதிரிகள் போலி சாமியார்கள் மட்டுமின்றி இந்துமத வெறியர்களும்தான். மூட நம்பிக்கை எதிர்ப்பு மசோதா தொடர்பாக டாக்டர் நரேந்திர தபோல்கரை எதிர்த்து எச்சரிக்கை விடுத்திருந்த சங்கராச்சாரியார் நரேந்திராச்சார்யாஜி மகராஜ் மேலும் நாசிக் போன்ற பகுதிகளில் இயங்கி வரும் ஆதிக்க சாதி பஞ்சாயத்துக்களின் அநியாய தீர்ப்புகளையும், அவர்கள் நடத்தும் கௌரவக் கொலைகளையும் எதிர்த்து தொடர்ந்து போராடி வந்தார். அந்த வகையில் சாதி வெறியர்களின் கோபத்துக்கும் தொடர்ந்து ஆளாகி வந்தார். பரிவர்த்தன் என்ற பெயரில் போதை அடிமைகளை மீட்டு எடுக்கும் மையம் ஒன்றை தனது சொந்த ஊரான சதாராவில் நடத்தி வந்தார். சதாரா நகரின் மக்கள் மத்தியில் தபோல்கருக்கு நல்ல மரியாதை இருக்கிறது.

புனே நகரில் மருத்துவர் நரேந்திர தபோல்கரின் வழக்கமான நடை பயணத்தின் போது 20.08.2013 அன்று காவிக் கூட்டங்களால் படுகொலை செய்யப்பட்டார். அதையொட்டி மக்கள் தாமாகவே முன்வந்து கடைகளை அடைத்துள்ளனர். அவரது வீட்டுக்கு வந்த மக்கள் மிகுந்த கோபத்துடன் ஆங்காங்கு சேர்ந்து மௌன ஊர்வலம் சென்றனர். அறுபது வயதை தாண்டிய பிறகும் ஓய்வெடுக்காது, ஏதேனும் மருத்துவமனையின் சிறப்பு மருத்துவராக உட்கார்ந்து கொண்டு சம்பாதிப்பதை மட்டும் பார்த்துக் கொண்டிருக்காமல், சமூகத்தின் நல்வாழ்விற்காக, சமூகத்தின் அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பதற்காக தனது உயிரைத் தியாகம் செய்த தபோல்கருக்கு நாம் செலுத்தும் உண்மையான நினைவஞ்சலி என்பது, அவர் போராடிய பாதையில் தொடர்ந்து போராடுவதிலும், அதில் குறிப்பிடத்தக்க அளவில் வெற்றி பெறுவதிலும் தான் இருக்கிறது.

இவரைக் கொல்வதற்கு இந்து மத வெறியர்களும், ஆதிக்க சாதிவெறியர்களும்தான் காரணம் என்பதை உலகமே அறியும். இந்து மத வெறியர்களை முறியடிப்பதன் மூலம்தான் உழைக்கும் மக்கள் நிம்மதியையும், விடுதலையையும், மகிழ்ச்சியையும் பெற முடியும்.

*(ஆகஸ்ட் 20: பகுத்தறிவாளர் மருத்துவர் நரேந்திர தபோல்கர் நினைவு நாள்)* ●

## “ பஞ்ச் ”

**மொரப்பா**



**மகளிர் உரிமைத் தொகை**

தகுதி இல்லாமல்
இருப்பவர்களுக்கு மட்டுமே
கிடைத்திருக்கும் தகுதி!

கட்டுரை

# கவித்துவத்துடன் கலைஞர் நூலகம்

**– ச.நல்லேந்திரன், ஜெ.பொன்மாறன்**




‘ஒரு நூலகம் திறக்கப்படுகிறது என்றால் 100 சிறைச்சாலைகள் மூடப்படும்’ என்கிறார்கள் அறிஞர்கள். உலக எழுத்தாளர்கள் பலரும் தங்களுடைய வாழ்நாளில் பெரும்பகுதியை நூலகங்களில் தான் செலவிட்டார்கள். மாமேதை மார்க்ஸ் மூலதனம் எனும் நூலை எழுதுவதற்காக தன்னுடைய வாழ்க்கையின் பெரும் பகுதியை நூலகத்தில் செலவிட்டுள்ளார். மாமேதை லெனின், “படி, படி படித்துக் கொண்டே இரு” என்றார். மாவீரன் பகத்சிங் ‘நான் சாகும்போது முட்டாளாக சாக விரும்பவில்லை’ என்றார். பேரறிஞர் அண்ணா தமது வாகனப் பயணத்தில் பெரும்பகுதியை படிப்பதற்காகவே செலவிட்டுள்ளார். முன்னாள் முதல்வர் கலைஞரும் புத்தகம் படிப்பதில் தீராத தாகம் கொண்டவர். அவருடைய பெயரில் தமிழின் தலைநகரம், அரசியல் தலைநகரம், தொல்லியல் நகரம், தூங்கா நகரம், கோவில் மாநகரம் என்ற ஐந்து பெருமைகளைக் கொண்ட மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் (ஜூலை 15) திறக்கப்பட்டுள்ளது. இதை நூலகம் என்று சொல்வதை விட மதுரை உள்ளிட்ட தென்மாவட்ட மக்களுக்கு கிடைத்த அறிவுக் களஞ்சியம் என்றே கூறலாம். கலைஞர் நூற்றாண்டு நூலகம் காலை ஒன்பது மணி முதல் இரவு எட்டு மணி வரை திறந்திருக்கும். வருடத்தில் எட்டு விடுமுறை நாட்கள் தவிர வாரத்தின் அனைத்து நாட்களிலும் நூலகம் திறந்திருக்கும். சுமார் 2 லட்சத்து 13 ஆயிரத்து 338 சதுர அடி பரப்பளவில் அடித்தளம், தரைத்தளம், அதனுடன் ஆறு தளங்களைக் கொண்டு ரூ.120 கோடியே 75 லட்சம் ரூபாய் செலவில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. அடித்தளத்தில் வாகன நிறுத்துமிடம், செய்தி-நாளிதழ் சேமிப்பு, நூல் கட்டும் பிரிவுகள் அமைந்துள்ளன.

தரைத்தளத்தில் கலைக்கூடம், மாற்றுத்திறனாளிகளுக்கான பிரிவு, மாநாட்டுக் கூடம், ஓய்வறை, சொந்த நூல்களைப் படிக்கும் பிரிவு, பல்வகை பயன்பாட்டு அரங்கம், உறுப்பினர் சேர்க்கை பிரிவு உள்ளிட்டவை அமைந்துள்ளன. முதல் தளமான கலைஞர் பகுதியில், குழந்தைகள் நூலகம், நாளிதழ்கள்-பருவ இதழ்களைப் படிக்கும் பகுதி, சொந்த நூல் களைப் படிக்கும் பிரிவு, அறிவியல் கருவிகள் பிரிவு உள்ளிட்டவை அமைந்துள்ளன. இரண்டாம் தளத்தில் தமிழ் நூல்கள் பிரிவு

உள்ளது. கலைஞரின் நூல்களைக் கொண்ட பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. மூன்றாவது தளத்தில் ஆங்கில நூல்கள், ஆராய்ச்சி இதழ்கள் உள்ளன. நான்காவது தளத்தில், எதிர்காலக் கனவுகளுடன் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் மாணவ-மாணவிகள் மற்றும் இளைஞர்களின் கனவை நனவாகும் வகையில் ஏறத்தாழ 30 ஆயிரம் புத்த கங்களுடனான பகுதி அமைக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது தளத்தில் மின்னணுத் தொழில்நுட்பத்தின் வாயிலாக இன்றைய தலைமுறைக்குத் தேவையான அறிவுச் செல்வங்கள் அனைத்தையும் தருவதற்கான பகுதி அமைக்கப்பட்டுள்ளது. ஆறாவது தளத்தில் நூல் பகுப்பாய்வு பிரிவு - அதாவது நூல் பட்டியல் தயாரித்தல் மற்றும் நிர்வாகப் பணியாளர்கள் சார்ந்த பகுதிகள் இடம்பெற்றுள்ளன. உள்கட்டமைப்புகள் அனைவரும் வியக்கும் வண்ணம் உள்ளது.

**வரலாற்று ஆய்வாளர்களுக்கான களஞ்சியம்**

ஒவ்வொரு பிரிவும் அதன் பயன்பாட்டுக்கும் தேவைக்கும் உகந்த விதத்தில் வடிவமைக்கப் பட்டுள்ளன. வரலாற்று ஆய்வாளர்களுக்கான மிகப்பெரும் சான்றாதாரக் களஞ்சியமாக இந்த நூலகத்திலுள்ள அரிய நூல்கள் பிரிவு இருக்கும். எடுத்துக்காட்டாக, 1918ஆம் ஆண்டு வெளிவந்த 'ஜஸ்டிஸ்' ஆங்கில இதழ்களும், திராவிட இயக்கத் தலைவர்கள் வெளியிட்ட 50-க்கும் மேற்பட்ட இதழ்களும் இந்தப் பிரிவில் இடம்பெற்றுள்ளன. 1824-ஆம் ஆண்டு வெளி வந்த சதுரகராதி முதல் பதிப்பு, லண்டன் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தை அடுத்து மது ரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் மட்டும் தான் இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

**கற்றலுக்கான மையம்**

கலைஞர் நூற்றாண்டு நூலகம் குழந்தை கள், மாணவர்கள், இளைஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், போட்டித் தேர்வுக்குத் தயாராகுபவர்கள், பெண்கள், மூத்த குடிமக்கள் என அனைத்துத் தரப்பினரும் பயன்படுத்தும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் நிகழ்ச்சிகளுக்கான அரங்கம், சிறார்களுக்கான திரையரங்கம், சிறார் அறிவியல் கூடம், பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிநூல் ஸ்டுடியோ, கலைக்கூடம் ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன. இதனால், கலை, பண்பாடு, அறிவியல், தொழில் நுட்பம் சார்ந்த கற்றலுக்கான மையமாகவும் இது இயங்கும்.

**மின் நூலகம்**

முற்றிலும் குளிரூட்டப்பட்ட இந்நூலகத்தில் மின்னுருவாக்கப் பிரிவுகளும் உண்டு. அரிய நூல்கள், ஆவணங்கள், ஓலைச்சுவடிகள், கையெழுத்துப் பிரதிகளை மின்னுரு வாக்கம்செய்து, மின்நூலகம் உருவாக்கி உலக மெங்கும் வாழும் தமிழர்களுக்கு எடுத்துச்செல்லப்படுகிறது. பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான புத்தகங்கள், அனைத்துப் புத்தகங்களையும் அவர்கள் வாசிப்பதற்கு ஏதுவாக டெய்சி, எம்பி3, பிஆர்எப், ஆடியோ வடிவங்களில் (DAISY MP3, BRF, Audio format) வழங்கப்படவுள்ளது.

**அறிவுக் கொண்டாட்டத்திற்கு**

குழந்தைகளுக்கான கதைசொல்லல், அறிவியல் அறிதல், கலைகள், விளையாட்டு, யோகா, கைவினைச் செய்முறைகள் போன்ற தொடர் நிகழ்வுகளையும் விடுமுறை காலச் சிறப்பு நிகழ்ச்சிகளையும் மேற்கொள்ளத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. மகளிருக்கான சுய தொழில் பயிற்சி வகுப்புகள், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு வழிகாட்டி நிகழ்ச்சிகள், மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சிகள், மொழி, இலக்கியம், வரலாறு, பொருளாதாரம், ஊடகம் போன்ற வெவ்வேறு துறைகளைச் சார்ந்த வல்லுநர்களுடன் தொடர் உரையாடல்கள், மாற்றுத் திறனாளிகளுக்கெனத் தனிப்பட்ட சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளது. நம்முடைய தொன்மையான நாகரீகத்தை அறிந்துகொள்ளும் வகையில் கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள், பாறை ஓவியங்கள், அகழாய்வுகள் குறித்து ஆளுமைகளுடன் உரை யாடல்கள் என வாசிப்புத் தேடலை அறிவுக் கொண்டாட்டமாக மாற்றும் முயற்சிகளும் இந்நூலகத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது. மதுரை மீனாட்சியம்மன்கோவில், மாரியம்மன் தெப்பக்குளம், திருப்பரங்குன்றம், அழகர்கோவில், திருமலை நாயக்கர் மகால், தொல்லியல் நகரான கீழடி என்ற பட்டியலில் இப்போது இணைந்துள்ளது கலைஞர் நூற்றாண்டு நூலகம். ●

# டி.எல்....
# இணையிலா ஈரெழுத்துச் சொல்

**- பெரணமல்லூர் சேகரன்**



டி.எல். என அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டவர் தோழர் தே. லட்சுமணன்.

தோழர் தே லட்சுமணன் தாம் அரசுப் பணியில் இருக்கும்போது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை உருவாக்கப் பாடுபட்டவர். அவர் பணி புரிந்த கால்நடைத்துறையில் தமிழ் நாடு கால்நடை ஆய்வாளர் சங்கத்தை உருவாக்கி மாநிலப் பொதுச்செயலாளராக செயல்பட்டவர். தமது அரசுப் பணியிலிருந்து விருப்ப ஓய்வில் சென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் முழுநேர ஊழியராக பணியாற்றினார். கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர், மாநில செயற்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் திறம்படப் பணியாற்றினார்.

மாற்றுத் திறனாளிகளுக்காக, சிறுபான்மை மக்களுக்காக, சமூக மாற்றத்திற்காக தனது இறுதி மூச்சுவரை உழைத்துக் கொண்டிருந்தார். எந்நேரமும் ஏழை, எளிய பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சனைகள் குறித்து சிந்தித்துக் கொண்டிருப்பார்.

அனைத்து நூல்களையும் தேடித் தேடி படிப்பார். வரலாற்று நிகழ்வுகளை அவருடன் இருக்கும் நபரிடம் சுருக்கமாக புரியும்படி எடுத்துரைப்பார்.

அவர் செங்கல்பட்டில் பாரதி மன்றத்தை உருவாக்கி அதன் ஆலோசகராக இருந்து முற்போக்குக் கருத்துக்களை மக்களிடம் எடுத்துச் சென்றவர். இந்த பள்ளியில் இலவசமாக ஏழை, எளிய பிரிவினருக்காக செயல்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதும் இருக்கக் கூடிய 250க்கும் மேற்பட்ட சிறப்பு பள்ளிகளை ஒருங்கிணைத்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கி அதற்கும் தலைவராக இருந்து திறம்பட செயல் பட்டவர். இன்று மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் 1,500 ரூபாய் உதவித் தொகை பெறுகிறார்கள் என்றால் அதற்கு காரணம் தோழர் டி.எல்.தான். தற்போது 4 லட்சத்து 80 ஆயிரம் குழந்தைகள் அந்த உதவித் தொகையை பெற்று பயன் பெறுகிறார்கள்.

இவர் 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் நாள் கொரோனா தீநுண்மிக்குப் பலியானார்.

*(ஆகஸ்ட் 24:தோழர் தே. லட்சுமணன் நினைவு நாள்)*

# மக்களை வஞ்சிக்கும் புதிய கல்விக் கொள்கை

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் "மாநில உரிமை பாதுகாப்பு மாநாடு"

2019 இல் புதிய கல்விக்கொள்கையின் முதல்நகல் ஆவணத்தை ஒன்றிய பாஜக அரசு வெளியிட்டது. அப்போது விரிவான விமர்சனங்களை நாடு முழுவதும் பல கல்வியாளர்களும் முன்வைத்தோம். பல்வேறு மக்கள் இயக்கங்களும் ஜனநாயக சக்திகளும் அரசியல் கட்சிகளும் ஒன்றிய அரசு வெளியிட்ட புதிய கல்விக் கொள்கை நகல் ஆவணத்தை ஆக்கப்பூர்வமாக விமர்சித்தன. ஆனால், இப்பொழுது அவசர அவசரமாக ஒன்றிய அரசு திணித்துவரும் புதிய கல்விக் கொள்கை, முன்வைக்கப்பட்ட அனைத்து விமர்சனங்களையும் முற்றிலும் புறந்தள்ளி மோசமான தன்மையில் அமைந்துள்ளது. அடிப்படையில் 3 கோணங்களில் இந்த புதிய கல்விக்கொள்கையின் மக்கள் விரோத தன்மையை காணலாம்.

**வணிகமயமாக்கல்**

இது முழுக்க முழுக்க கல்வியை வணிகமய மாக்கும் ஒரு அணுகுமுறை. துவக்கப் பள்ளியிலிருந்து உயர் கல்வி வரை வணிகமயமாக்கி, விற்கப்படும் சரக்காக கல்வியை மாற்றுவது, லாபநோக்கத்தின் அடிப்படையில் மட்டுமே கல்வி என்று நாடு முழுவதும் அனைத்து நிலை கல்வியையும் வணிகமயமாக்கும் போக்கு. ஆனால் இதனை மறைக்க ஏராளமான வார்த்தை ஜாலங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், இது வணிகமயமாக்கல் மட்டுமல்ல; பெரும் நிறுவனங்களின் லாப வேட்டைக் காடாக கல்விப் புலம் ஆக்கப்படுகின்ற கார்ப்பரேட் மயம் என்ற கொள்கை அமலாக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒன்றிய அரசின் கல்விக் கொள்கை பெரிய தனியார் கல்வி நிறுவனங்களுக்கு கொள்ளை லாபம் ஈட்ட, மையப்படுத்தப்பட்ட கல்வியை முன்மொழிகிறது. மழலைப் பள்ளி முதல் 12ஆம் வகுப்பு வரை ஒரே வளாகத்தில் வைக்கவேண்டும் என்கிறது. பெரிய பள்ளி வளாகமாக இருக்கும்போது, படிக்கக் கூடிய மாணவர்களுக்கு நல்ல வசதியாகத் தானே இருக்கும் என்று சிலர் கருதலாம். ஆனால் இதில் ஏராளமான பிரச்சனைகள் உள்ளன. ஒரு மாவட்டத்தில் அப்படி பெரிய பள்ளி வளாகம் சில தானே இருக்க முடியும். தூரத்தில் இருக்கும் இப்பள்ளிக்கு கிராமத்திலிருந்து ஏழை மாணவர்கள் சென்று படிக்க முடியுமா? பெண் குழந்தைகளை அனுப்புவார்களா? தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட, பழங்குடியின மாணவர்களுக்கு போக்கு வரத்துக்கான, தங்குவதற்கான காசும் வசதியும் அரசு உத்தரவாதம் செய்யுமா? இதற்கான வரவு -செலவு, சாத்தியப்பாடு எல்லா மக்களுக்கும் இருக்குமா? நிச்சயமாக இருக்காது. அரசு, நிதிப் பொறுப்பேற்காத நிலையில் இத்தகைய முனைவுகள் ஏழை மக்களுக்கும் பெண்களுக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் கல்வியை மறுக்கும் தந்திரம் என்றே கூறலாம்.

உயர்கல்வி பற்றி கேட்கவே வேண்டாம். அதனை மொத்தமாக தனியார் கார்ப்பரேட் நிறுவனங்கள் கையில் ஒப்படைக்க வாஜ்பாய் ஆட்சி காலத்தின் பிர்லா - அம்பானி பரிந்துரைகளில் துவங்கி ஆர்எஸ்எஸ் முயன்றுவருகிறது. மூன்று வகையான உயர்கல்வி நிறுவனங்களை புதிய கல்விக் கொள்கை முன்வைக்கிறது. ஒன்று, ஆராய்ச்சியை மட்டும் கவனிக்கிற ஒரு பல்கலைக்கழகம். இரண்டாவது, கல்வி கற்பித்தலை மட்டும் கவனிக்கிற

பல்கலைக்கழகம், மூன்றாவது தனியாக இயங்கும் கல்லூரிகள். (பல்கலைக்கழக இணைப்பின்றி, அவர்களே டிகிரி கொடுக்கலாம்.) இதில் ஒவ்வொன்றிலும் குறைந்தது 10 ஆயிரம் மாணவர்கள் இருக்க வேண்டும் என்கிறது ஒன்றிய அரசு. மாணவர்கள் இத்தகைய கல்லூரிக்கு சென்று படிக்க வேண்டும் என்றால், போக்குவரத்துச் செலவு மட்டுமின்றி அங்கு சென்று தங்கிப் படிக்க வேண்டிய சூழல் ஏற்படும். இதுவும் பெரும்பகுதி சாதாரண, உழைப்பாளி குழந்தைகளை கல்வியிலிருந்து தள்ளி வைக்கிற ஏற்பாடு.

**மையப்படுத்துதல்**

ஒன்றிய அரசின் தேசிய கல்விக் கொள்கை அதிகாரங்களை மையப்படுத்துகிறது. முந்தைய ஒன்றிய அரசுகள் இவ்வகையில் எடுத்த முயற்சிகளை விட மிகத் தீவிரமாக பாஜக அரசு இதில் இறங்கி யுள்ளது. இந்தியா முழுவதும் உயர்கல்வி நிலையங்களை கண்காணிக்க பிரதமர் தலைமையில் ஒரு குழு அமைப்பது என்ற முன்மொழிவு உள்ளிட்டு, உயர்கல்வி நெறிமுறைகள், நிதி மானியங்கள் வழங்குதல், பாடத்திட்டங்கள், தேர்வுகள், மற்ற மதிப்பீட்டு முறைகள், தர நிர்ணயம், கல்வி நிறுவனங்களின் அன்றாட நிர்வாக வழிமுறைகள் என்று எதையும் விட்டுவைக்காமல் இவை ஒவ்வொன்றிற்கும் ஒன்றிய அரசின்கீழ் இயங்கும் அமைப்புகள் முன்மொழியப்பட்டுள்ளன. இந்தியா முழுவதும் கல்வியை நாங்கள் தில்லியி லிருந்து கண்காணிப்போம் என ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது. இதில் மாநிலங்களுக்கு பங்கு கிடையாது. இது ஏற்கத்தக்கது அல்ல. இது முற்றிலும் ஜனநாயக விரோத அணுகுமுறை என்பதோடு, நடைமுறையில் பெரும் குழப்பங்களை உண்டாக்கும்.மிக முக்கியமாக,பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட, பல மொழிகளைப் பேசக்கூடிய, பல்வேறு பண்பாடுகளை தகவமைத்துக் கொண்ட மக்களின் பன்மைத்தன்மையை மறுதலித்து, இந்தியா முழுவதும் ஆளுங்கட்சியின் கோட்பாட்டை தொடர்ந்து மறைமுகமாக புகுத்த முயற்சிக்கிறது இக்கொள்கை.

**மதவெறி மயமாக்குதல்**

இந்தியத் தன்மையில் இருக்கும் கல்வி, இந்திய மரபுகளை சார்ந்திருக்கும் கல்வி என்று கல்விக் கொள்கை ஆவணம் பேசுகிறது. அது என்ன இந்திய மரபு? சாதி சார்ந்த கல்வியாக இருக்குமா? இந்தியா என்ற ஒரு தேசம் என்றென்றும் இருந்த தாக சொல்லப்படுகின்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது. இது அறிவியல் ரீதியாக ஏற்புடையதல்ல. இந்தியா என்ற ஒரு முழுமையான தேசம் என்பது எப்பொழுது உருவானது? காலனிய எதிர்ப்புப் போராட்டத்தில், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் பல்வேறு மொழிகள் பேசக்கூடிய மக்கள் இயல்பாக, தாமாக முன்வந்து ஒன்றிணைந்து வெள்ளைய னை விரட்டிய அந்த வரலாற்றுச் செயல் முறையில் தான் நவீன இந்தியா உருவாகுகிறது. இது பல்வேறு தேசிய இனங்களின் நாடு. இந்துத்வா கோட்பாட்டின் அடிப்படையில் நின்று ஒற்றை மொழி, ஒற்றை மதம் என ஒற்றைத் தன்மையில் இந்தியாவை பார்க்க/ திணிக்க ஒன்றிய அரசின் கல்விக்கொள்கை முயல்கிறது. இதனை முறியடிக்கவேண்டும்.

**கல்விக்கு உரிய நிதி கொடுக்க மறுக்கும் ஒன்றிய அரசு**

1968ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் ஒரு கல்விக் கொள்கை நிறைவேற்றப்பட்டது. பின்னர் 1986ஆம் ஆண்டு காங்கிரஸ் அரசாங்கம் ஒரு புதிய கல்விக் கொள்கையை கொண்டு வந்தது. 1992ஆம் ஆண்டு அது திருத்தப்பட்டது. 2004இல் ஐமுகூ அரசு பொறுப்பேற்ற போது, இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவைச் சார்ந்து அவர்கள் இருந்தார்கள். இடதுசாரிகள் கடுமையான அழுத்தம் கொடுத்து, குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில் ''ஒன்றிய -மாநில அரசுகள் இணைந்து ஒட்டுமொத்தமாக கல்விக்கு செய்யப்படுகின்ற செலவு என்பது தேசிய உற்பத்தி மதிப்பில் 6 சதவீதமாக இருக்க வேண்டும்'' என்ற 1966ஆம் ஆண்டு கோத்தாரி கல்வி ஆணையம் அளித்திருந்த

பரிந்துரையை சேர்க்க வைத்தார்கள். ஆனால் 2008 இல் இடதுசாரிகள் ஆதரவு இன்றி ஆட்சி செய்யும் வாய்ப்பை பெற்ற ஒன்றியஅரசு வேறு பாணியில் பயணித்தது. இன்று வரை இந்தியாவின் கல்விக்கான ஒதுக்கீடு என்பது ஜிடிபியில் 3.5-4 சதவீதத்தை தாண்டிச் சென்றதில்லை. கல்விப் புலத்தில் அரசுப் பொறுப்பையே புறந்தள்ளுகிற வகையில் தான் நவீன தாராளமய அணுகுமுறை இருக்கிறது. கல்விக்கு 6 சதவீதம், ஆரோக்கியத்திற்கு 2-3 சதவீதம் என்ற இலக்கை முதலாம் ஐமுகூ அரசின் குறைந்தபட்ச பொதுத்திட்டம் முன்வைத்தாலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

**ஒன்றிய அரசும் கல்வியும்**

கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு கொண்டுவரவேண்டும் என்பது முக்கியமான ஜனநாயகக் கோரிக்கை. மாநிலங்கள் கல்விப்புல முயற்சிகளுக்கு ஒன்றிய அரசு முழுமையாக நிதி உள்ளிட்டு பலவகைகளில் உதவுவதை எவரும் எதிர்க்கவில்லை. மாநிலங்களின் உரிமைகளை பறிப்பதைத்தான் எதிர்க்கிறோம். புதிய கல்விக் கொள்கையின் உள்ளடக்கம் என்பது, அதிகாரங்களை மையப்படுத்துதல், மாநிலங்களின் பங்கை மறுதலிப்பது, பல்வேறு தேசிய மொழிகளை, பண்பாடு களை மறுதலிப்பது என்றவகையில் உள்ளது. எடுத்துக்காட்டாக, பள்ளிக் கல்வி பாடத்திட்டத்தில், அரசு பரிந்துரைக்கும் பாடபுத்தகங்கள் வாயிலாக தனது இந்துத்வா தத்துவத்தை, இந்தியக் குடியரசின் அரசியல் சாசனத்திற்குப் புறம்பான விழுமியங் களைப் புகுத்த தனது கல்விக்கொள்கை வாயிலாகவும் வேறுபல நடவடிக்கைகள் மூலமாகவும் ஒன்றிய அரசு முனைகிறது. அதேபோல், இந்தி சமஸ்கிருதம் படிக்க வேண்டும் என்கிறார்கள். விரும்புகிறவர்கள் படிக்கட்டும். எல்லோரும் எதற்கு சமஸ்கிருதம் படிக்க வேண்டும்? அனைத்து மக்கள் மீதும் ஏன் வடமொழியை / இந்தியை திணிக்க வேண்டும்? ஒன்றிய அரசின் முனைவுகள் ஒற்றைக் கலாச்சாரத்தை உருவாக்கக் கூடிய முயற்சிதான். அது கல்விக் கொள்கையிலும் பிரதிபலிக்கிறது.

**தேவை விமர்சனப் பார்வை**

நமதுநாட்டில் கல்விப்புலத்தில் அனைத்தையும் கேள்விக்குள்ளாக்கும் விமர்சனப் பார்வை வளர வேண்டும். இந்தியக் கல்வி அமைப்பை புனரமைப்ப தாக இருந்தால், கேள்வி கேட்கும் பார்வை, அறிவியல் அணுகுமுறை உருவாக வேண்டும். இதற்கு நேர்மாறாக, "இந்திய பாரம்பரியத்தில் எல்லாமே இருக் கிறது; பெரியவர்கள் சொல்லிவிட்டார்கள்" என்றால், அது கல்வியே கிடையாது. திறனாய்வு சிந்தனை (critical thinking) உடைய குடிமக்களை உருவாக்குவது தான் கல்வியின் முக்கியமான வேலை. ஒன்றிய அரசின் மக்கள் விரோத புதிய கல்விக் கொள்கையை முறியடிப்போம்! ●



**டாக்டர்**: இந்தாங்க இந்த சுகர், பிபி மாத்திரையெல்லாம் தவறாம தினமும் சாப்பிட்டணும்.

**நோயாளி** : டாக்டர் இந்த மாத்திரையெல்லாம் சாப்பிட்டா சைட் எபெக்ட் வருங்களா?

**டாக்டர்**: இதை நீங்க பர்கர், பிட்சா, நூடுல்ஸ் எல்லாம் சாப்பிட்டப்போ அந்தக் கடைகாரனுங்ககிட்டே கேட்டிருக்கணும்.

# பொது சிவில் சட்டம் தேவைதானா?

**- பெ.ரவீந்திரன்**



பொதுசிவில் சட்டம் என அழைக்கப் படும் 'சீரான சிவில் சட்ட' (uniform civil code) முன் வரைவை வரும் மழைக்கால கூட்டத் தொடரில் பாஜக அரசு நாடாளுமன்றத்தில் முன்வைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அதற்கு ஏற்ற வகையில் இந்திய சட்டக்கமிஷன் பொது சிவில் சட்டம் குறித்து பொது மக்களின் கருத்து கேட்டு 14.06.2023 அன்று அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இதனிடையில் இந்தியா முழுவதும் பொது சிவில் சட்டத்திற்கு எதிராக பல்வேறு தரப்பினர்களின் குரல்கள் ஓங்கி ஒலிக்கத் துவங்கியுள்ளன.

அதேவேளையில், பொது சிவில் சட்டம் குறித்து சரியான புரிதல் இல்லாமல் அதை ஆதரிக்கும் பலர், அம்பேத்கரும், நேருவும் ஆதரித்த பொதுசிவில் சட்டத்தை எதிர்ப்பது சரியா என்ற கேள்வியை முன் வைக்கின்றார்கள். அதேபோல் பொது சிவில் சட்டத்தை இஸ்லாமியர் மட்டும் எதிர்ப்பது போன்றும், வாக்கு வங்கி அரசியலுக்காக எதிர்க்கட்சிகள் அவர்களை ஆதரிப்பது போன்றும் ஒரு தோற்றத்தை திட்டமிட்டு உருவாக்கி வருகிறார்கள். இந்திய குடிமக்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான சட்டங்கள் தானே இருக்க முடியும்; இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லா மியர்களுக்கு என்று தனித்தனியாக சட்டங்கள் இருப்பது மதச்சார்பின்மை கோட்பாட்டிற்கு எதிரானது அல்லவா என்ற கேள்வியையும் முன்வைத்து வருகிறார்கள். இந்த கேள்விகளையெல்லாம் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் பொதுசிவில் சட்டம் குறித்து அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது.

**பொது சிவில் சட்டம் தான் என்ன?**

இந்தியாவில் பொது சிவில் சட்டங்கள் பல உள்ளன. உரிமையியல் நடைமுறைச் சட்டம், இந்திய சாட்சி சட்டம், ஒப்பந்த சட்டம், மாற்றுமுறை ஆவணச்சட்டம், பொருட்கள் விற்பனை சட்டம், சொத்து உரிமை மாற்று

சட்டம் என்று ஏராளமான சிவில் உரிமைகள் சார்ந்து பொதுச் சட்டங்கள் (Public laws) உள்ளன. அதே வேளையில் திருமணம், விவாகரத்து, சொத்துரிமை, வாரிசு உரிமை, ஜீவனாம்சம், தத்தெடுத்தல் போன்ற தனிநபர் சார்ந்த விவகாரங்களுக்கு பொதுவான சட்டங்கள் இல்லை. இவை அனைத்தும் அந்தந்த மதம், சமூகம், இனம் சார்ந்த பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் மற்றும் அந்தந்த மத நூல்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் இந்து திருமணச் சட்டம், இந்து வாரிசுரிமைச் சட்டம், இந்து ஜீவனாம்சம் மற்றும் தத்தெடுக்கும் சட்டம், இஸ்லாமிய ஷரியத் சட்டம், இந்திய விவாகரத்து சட்டம், சிறப்பு திருமணச் சட்டம் என்ற தனிநபர் சார்ந்த (Personal laws) சட்டங்களாக இயற்றப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாது இந்தியாவில் உள்ள பல்வேறு ஆதிவாசி சமூகங்களில் தனித் தனியே திருமணம், விவாகரத்து, ஜீவனாம்சம், வாரிசு உரிமை, சொத்துரிமை குறித்து பல்வேறு பழக்க வழக்கங்களும் நடைமுறைகளும் இருந்து வருகின்றன. ஆதிவாசிகளின் இந்த பழக்கவழக்கங்களும் நடைமுறைகளும் சட்ட வடிவமாக (codification of law) ஆக்கப்படாததோடு எழுத்து வடிவமாகக் கூட ஆக்கப்படாமல் நடைமுறையில் உள்ளது. இவற்றை யெல்லாம் அகற்றிவிட்டு இந்தியா முழுவதும் திருமணம், விவாகரத்து, ஜீவனாம்சம், வாரிசுஉரிமை, சொத்துரிமை, தத்தெடுத்தல் போன்றவை அடங்கிய அனைவருக்கும் பொதுவான சிவில் சட்டத்தை உருவாக்குவது என்பதே, பாஜக அரசு முன் வைக்கும் பொது சிவில் சட்டத்தின் நோக்கம்.

### இந்து திருமண முறைகளிலேயே எத்தனை வேற்றுமை!

இந்தியாவின் பலமே ‘வேற்றுமையில் ஒற்றுமை’ தான் என்கிறோம். அது வேற்றுமையில் ஒற்றுமை அல்ல. மாறாக பன்மைத்துவத்தின் ஒருமை அல்லது ஒற்றுமை என்பதே சரியாகும். அந்த வகையில் தனிநபர் சார்ந்த திருமணம், விவாகரத்து, சொத்துரிமை, வாரிசுரிமை மற்றும் ஜீவனாம்சம் போன்ற விவகாரங்கள் எல்லாம் இந்தியாவில் உள்ள பல்வேறு மதங்கள், இனங்கள் மற்றும் பழங்குடிகளுக்கிடையேயான வெவ்வேறு வகையான மாறுபட்ட பழக்க வழக்கங்களும் எழுதப்படாத சட்ட திட்டங்களும் நடை முறையில் இருந்து வருகின்றன. இந்து திருமண முறைகளிலேயே கூட, பல்வேறு மாறுபட்ட பழக்க வழக்கங்கள் இருப்பதை இந்து திருமணச் சட்டமே அங்கீகரித்துள்ளது. தென்னிந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில், தாய் மாமன் மகளை திருமணம் செய்வதும், தகப்பனின் உடன்பிறந்த சகோதரியின் மகளை திருமணம் செய்வதும் நடைமுறையில் உள்ளது. ஆனால் இந்து திருமணச் சட்டம் பிரிவு 5 (எ) அந்த உறவுமுறை திருமணங்களை சபிண்டாஸ் (sapindas) என்று கூறி தடை செய்கிறது. (Prohibited relationship of Marrage). அதேவேளையில் அதே சட்டம் தென்னிந்திய உறவுமுறை திருமணத்தை நீண்ட நெடிய பாரம்பரிய பழக்கவழக்கம் என்ற அடிப்படையில் அங்கீகரிக்கின்றது. பொது சிவில் சட்டம் என்று வரும்பொழுது தென்னிந்திய நடைமுறையான உறவுமுறை திருமணம் என்பது தடை செய்யப்படலாம்.

### தமிழ்நாடு கொண்டு வந்த சட்டத்திருத்தம்

அதேபோல் அந்தந்த சமூகம் சார்ந்த பழக்க வழக்கங்கள் மற்றும் சடங்குகளின் அடிப்படையில் திருமணத்தை நடத்திக் கொள்ளலாம் என்று சொல்லும் இந்து திருமணச் சட்டப் பிரிவு 7, அப்படி செய்யும் திருமணமானது யாகம் வளர்த்து மணமக்கள் இருவரும் 7 முறை அந்த யாகத்தைச் சுற்றி வரவேண்டுமென்றும், 7வது முறை சுற்றி முடிந்த பின்பே திருமணம் முழுமையடைகிறது என்றும் கூறுகிறது. தமிழகத்தில் சமூகத்தின் உயர் அடுக்கில் உள்ள சில சாதிகளைத் தவிர பெரும்பான்மையான பிற்படுத்தப்பட்ட, பட்டியலின சமூகங்களில் யாகம் வளர்த்து, அதை சுற்றி வந்து திருமணம் செய்து கொள்ளும் பழக்கம் கிடையாது. இன்னும் குறிப்பாக சொல்லப்போனால் கிராமக் கோயில்களில் அல்லது பெரியவர்கள் முன்னிலையில் மாலை மாற்றி தாலிகட்டி திருமணம் செய்து கொள்வது நடைமுறையில்

இருந்து வருகிறது. இந்து திருமணச் சட்டப்படி இந்த வகையான திருமணங்கள் எல்லாம் திருமணம் என அங்கீகரிக்கப்படாமல் இருந்தன. இது போன்ற திருமணங்களையும் சுயமரியாதை திருமணங்களையும் அங்கீகரிக்கும் வகையில் இந்தியாவில் முதன் முதலாக தமிழக அரசு 1967ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம் பிரிவு 7யுன்படி சட்டத் திருத்தம் கொண்டுவந்தது.

இந்துக்களில், பிராமண சாதியில் விதவை மறு மணம் தடை செய்யப்பட்டுள்ளது. மற்ற வர்ணங்களில் விதவை மறுமணம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதேபோல் பிராமணர்களின் திருமணமுறை என்பது கன்னிகாதானம் என்ற அடிப்படையில் பிரம்ம விவாகம் எனப்படுகின்றது. மற்ற வர்ணங்களில் பரிசம் போட்டு பெண்ணை திருமணம் செய்து கொள்ளும் அசுர விவாகம் என்ற முறையிலான திருமணம் என்று சொல்லப்படுகின்றது. இப்படி இந்து திருமணச் சட்டத்திற்குள்ளேயே திருமணம் குறித்து பல்வேறு மாறுபட்ட பழக்க வழக்கங்களும் நடைமுறைகளும் இருக்கும் நிலையில் இந்துக்கள், சீக்கியர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், ஆதிவாசிகள் என அனைவரின் பழக்கவழக்கங்களையும் நடைமுறை களையும் மறுதலித்து பொது சிவில் சட்டம் என்பது இந்தியாவின் பன்மைத்துவத்தை சிதைக்கும் செயல் ஆகும். திருமணத்தைப் போன்றே வாரிசுரிமை, சொத்துரிமை, விவாகரத்து போன்றவற்றிலும் இந்திய சமூகத்தில் பல்வேறு பழக்கவழக்கங்களும் நடை முறைகளும் பின்பற்றப்படுகிறது.

**இஸ்லாமியர்கள் மட்டும் தான் எதிர்க்கிறார்களா?**

போபாலில் பேசிய பிரதமர் மோடி இஸ்லாமியர் மட்டுமே பொது சிவில் சட்டத்தை எதிர்ப்பதாகவும், வாக்கு வங்கி அரசியல் பசி உள்ளவர்கள் அதை ஆதரிப்பதாகவும் பேசியுள்ளார். இஸ்லாமியர் மட்டுமல்லாது சீக்கியர்கள், பார்சிகள், ஜெயின்களின் ஒரு பிரிவினர் மற்றும் ஆதிவாசிகள் ஆகியோர் பொது சிவில் சட்டம் தங்களது பாரம்பரிய பழக்கவழக்கங்களை நீர்த்து போகச் செய்துவிடும் என்றும், தங்களின் தனித்தன்மையை அது பறித்துவிடும் என்று கூறி எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள் என்பதை பிரதமர் மோடி திட்டமிட்டு மறைத்துள்ளார். இந்திய மக்கள் தொகையில் 8 சதவீதம் உள்ள ஆதிவாசி மக்களின் பல்வேறு குழுக்களிடையே திருமணம், விவாகரத்து, சொத்துரிமை, ஜீவனாம்சம், வாரிசுரிமை போன்றவற்றில் பல்வேறு மாறுபட்ட பழக்க வழக்கங்களும் நடைமுறைகளும் உள்ளன. குறிப்பாக சிலவற்றை குறிப்பிடலாம்: மிஜோ இனமக்களின் வாரிசுரிமை என்பது பெற்றோர் அல்லது சொத்தின் உரிமையாளர் மரணித்து இறுதிச்சடங்குவரை எப்படி பராமரிக்கப்பட்டு வரப்பட்டார் என்பதைப் பொறுத்தே அமைகின்றது. பெற்ற குழந்தையாக இருந்தாலும் பெற்றோர்களை இறுதிவரை பராமரிக்கவில்லை என்றால் குழந்தை களுக்கு சொத்துரிமை கிடையாது.

அதேபோல் காஸி (khasi) இனமக்களில் தாய்வழி சமூக முறையே நடைமுறையில் உள்ளது. காஸி இன மக்களின் சொத்துக்களில் வாரிசுரிமை என்பது கடைசி மகளுக்கே உள்ளது. பெற்றோரையும் குடும்பத்தில் வருவாய் ஈட்ட முடியாதவர்களையும் பராமரிக்கும் பொறுப்பு கடைசி மகளுக்கே உள்ளது. இப்படி பல்வேறு மாறுபட்ட பழக்கவழக்கங்களையும் நடைமுறைகளையும் கொண்டுள்ள சிக்கிம், மேகாலயா, மிசோரம், நாகலாந்து போன்ற வட கிழக்கு மாநிலங்களில் வாழும் ஆதிவாசி மக்கள் இந்திய அரசியலமைப்பு சட்டம் அட்டவணை எண்.5 மற்றும் அட்டவணை எண்.6 தங்களுக்கு வழங்கியுள்ள நிலத்தின் மீதான உரிமை மற்றும் பாரம்பரிய பழக்கவழக்கங்கள் சார்ந்த நடைமுறைகளை பறித்துவிடும் என்று கூறி பொதுசிவில் சட்டத்தை கடுமையாக எதிர்த்து வருவதோடு, அம்மாநில அரசுகளும் பொது சிவில் சட்டத்தை எதிர்க்கின்றன. மேகாலயா ஆதிவாசிகள் அவர்களுக்கிடையில் இருக்கும் பல்வேறு உட்பிரிவுகளில் திருமணம் வாரிசு உரிமை, சொத்துரிமை, விவாகரத்து, ஜீவனாம்சம் போன்றவற்றில் தாங்கள் காலம்

காலமாக பின்பற்றி வரும் வெவ்வேறு வடிவிலான பழக்க வழக்கங்க ளையும் நடைமுறைகளையும் பொது சிவில் சட்டம் பறித்து தங்களது தனித்தன்மையை இழக்கச் செய்துவிடும் என்று அஞ்சுகிறார்கள்.

அசாம் மாநிலத்தில் ஆதிவாசி மக்களின் காஸி ஜெயிந்தியா மாவட்ட மலைக்கவுன்சில், காரோ மாவட்ட மலைக்கவுன்சில் ஆகியவற்றிற்கு வழங்கியுள்ள சிறப்பு அதிகாரத்தையும் அந்தஸ்தையும் பொது சிவில் சட்டம் பறித்துவிடும் என்று கூறி கடுமையாக எதிர்த்து வருகின்றார்கள். அதேபோல் ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் பீகார் மாநிலங்களின் ஆதிவாசி அமைப்புகளும் பொது சிவில் சட்டத்தை கடுமையாக எதிர்த்து வருகின்றன.

### வரலாற்றுப் பின்னணி

ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் மெக்காலே தலைமையில் 1833ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட முதல் சட்டக்கமிஷன் இந்தியாவிற்கான சட்டங்களை உருவாக்கும்போது (Codification of laws) அவை பொதுத்தன்மையுடன் (Uniform code) இருக்க வேண்டும் என்று கூறியது. அப்படி பொதுத்தன்மையுடன் சட்டங்கள் உரு வாக்கும்போது வட இந்திய இந்து கூட்டுக் குடும்பங்கள் அனுபவித்து வந்து, கூட்டுக்குடும்ப சொத்துக்கு வழங்கப்பட்ட (HUF- Hindu Undivided Family) சலுகைகள் பறிபோய்விடும் என்றும், விதவைகள் மறுமணம், பலதாரமணம் முதலியவை குறித்த சீர்திருத்தங்களை இந்து சமூகத் தலைவர்களும்; முத்தலாக், ஜீவனாம்சம் போன்ற அம்சங்களில் இஸ்லாமிய சமூகத் தலைவர்களும், இரு மதங்களின் அடிப் படை வாதிகளும் கடுமையாக எதிர்ப்பைத் தெரி வித்ததன் விளைவாக தனிநபர் சார்ந்த திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை, ஜீவனாம்சம் போன்ற விவகாரங்கள் குறித்து பொதுவான சிவில் சட்டம் கொண்டு வருவதிலிருந்து ஆங்கிலேய அரசு பின்வாங்கியது.

சுதந்திர இந்தியாவில் நாகரீக சமூகத்தில் பொது சிவில் சட்டம் என்பதே இந்திய சமூகத்தை முன்னோக்கி நகர்த்திச் செல்லும் என்ற நோக்கில், பொது சிவில் சட்டம் நிறைவேற்ற ஜவஹர்லால் நேரு விரும்பினார். அதனடிப்படையில் அம்பேத்கர் தலைமையில் அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையில் பொது சிவில் சட்டம் குறித்து விவாதிக்கப்பட்டு சட்ட அமைச்சர் என்ற முறையில் பொதுசிவில் சட்டம் குறித்த சட்ட முன் வரைவை நாடாளுமன்றத்தில் அம்பேத்கர் முன் வைத்துள்ளார். ஆனால், காங்கிரஸ் தலைவராக இருந்த வல்லபாய் பட்டேலும் இஸ்லாமிய தலைவர்களும் முதல் சட்டக்கமிஷன் கூறிய பொதுத் தன்மை வாய்ந்த சட்டங்களுக்கு என்ன காரணங்களுக்காக எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதோ, அதே காரணங்களுக்காக கடுமையாக எதிர்த்ததன் அடிப்படையில் அந்த சட்ட முன் வடிவு திரும்பப் பெறப்பட்டது. அதுகுறித்து கருத்து தெரிவிக்கும்போது ‘சட்டங்கள் இயற்றுவதற்கு மதங்கள் குறுக்கிடும் போக்கை புரிந்து கொள்ள முடிய வில்லை’ என்று கூறிய அம்பேத்கர், ‘பொது சிவில் சட்டம் இயற்ற அரசு முற்படும்போது குறிப்பாக முஸ்லீம் சமூகத்தினரின் கருத்தொற்றுமையுடன் செயல்படவில்லை என்றால் குழப்பமே ஏற்படும்’ என்றும் கூறினார். ஆக அம்பேத்கர் இந்திய சமூகத்தின் ஒத்த கருத்தின் அடிப்படையிலேயே பொது சிவில் சட்டம் நிறைவேற்ற வேண்டும் என்ற வலுவான கருத்தை கொண்டிருந்தார் என்பது உறுதியாகிறது.

### பாஜக அரசின் நோக்கம்

பாலின அசமத்துவம் மற்றும் பாகுபாடு இன்றி அனைவருக்கும் சமமாகப் பொருந்தும் வகையில் பொது சிவில் சட்டத்தை அமைப்பதே நோக்கம் என்று ஒன்றிய பாஜக அரசு கூறிக் கொண்டாலும் இஸ்லாமியர்களைக் குறிவைத்தே பொது சிவில் சட்டம் கொண்டு வர முயற்சிக்கிறது என்ற அச்சம் அந்த மக்களிடம் உள்ளது. பெயரளவில் பொது சிவில் சட்டம் என்று கூறிவிட்டு இந்து சனாதன தர்மத்தின் அடிப்படையில் சிவில் சட்டத்தை நிறைவேற்றுமோ என்ற ஐயத்தை பல்வேறு இஸ்லாமிய சமூகத் தலைவர்களும் எழுப்பி வருகிறார்கள்.

**செய்ய வேண்டியது என்ன?**

பொதுசிவில் சட்டத்தை எதிர்க்கும் அதே வேளையில் முத்தலாக், பலதாரமணம், வாரிசுரிமை, சொத்துரிமை, ஜீவனாம்சம், விவாகரத்து போன்ற அம்சங்களில் பெண்களுக்கு பாதகமான அம்சங்களை நீக்கி பாலின சமத்துவம் கொண்ட சட்டத் திருத்தங்களை மேற் கொள்ள வேண்டிய அவசியமும் உள்ளது. பாலின அசமத்துவத்தை களைவதற்கு செய்ய வேண்டிய அடிப்படையான முக்கிய நடவடிக்கையும் அதுவே.

அந்த வகையில் ஜவஹர்லால் நேரு, பொது சிவில் சட்டத்தின்மூலம் செய்ய நினைத்து முடியாமல் போன பல்வேறு சீர்திருத்தங்களை தனிநபர் சட்டங்களில் தேவையான மாற்றங்களுடன் சட்டத் திருத்தங்கள் மூலம் செய்தார். உதாரணமாக, எவரும் தங்கள் திருமணத்தை பதிவு செய்து, அதன் மூலம் அவரவர் மதம் சார்ந்த தனிநபர் சட்டம் அனுமதிக்கவில்லை என்றாலும், வாரிசுரிமை பெறும் வகையில் 1954ம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டத்தைக் கொண்டு வந்தார். பல தார மணத்தை தடை செய்தல், தத்தெடுத்தவர் பிள்ளை யின் தாயாரை திருமணம் செய்து கொள்ளலாம் போன்ற பல்வேறு திருத்தங்களை இந்து தனிநபர் சட்டங்களில் கொண்டு வந்தார். இந்து வாரிசுரிமைச் சட்டப்படி பெண்களுக்கு பெற்றோர் சொத்தில் சம உரிமையை மறுத்து வந்த நிலையில் முதன் முதலாக 1989ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு பெண்களுக்கு பெற்றோர் சொத்தில் சம உரிமை கிடைக்கும் வகையில் இந்து வாரிசுரிமைச் சட்டம் (தமிழ்நாடு சட்டத் திருத்தம்) 1989ன்படி முற்போக்கான சட்டத்திருத்தம் கொண்டு வந்தது. அதன் பின்னரே ஒன்றிய அரசு 2005ம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் திருத்தம் செய்து, பெண்களுக்கு பெற்றோர் சொத்தில் சமஉரிமை வழங்க வகைசெய்தது.

அதே வழியில் தனிநபர் சட்டங்களில் உள்ள பாலின அசமத்துவத்தை நீக்கும் வகையில் முத்தலாக், வாரிசுரிமை, சொத்துரிமை, ஜீவனாம்சம், விவாகரத்து, தத்தெடுத்தல் போன்ற தனிநபர் விவகாரங்களில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள தனிநபர் சட்டங்களில் (Personal laws) சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். மாறாக இந்து சனாதனக் கோட்பாட்டின் அடிப்படையிலான பொது சிவில் சட்டத்தை நிறைவேற்ற செய்யும் அத்தனை முயற்சிகளும் இந்திய நாட்டின் பன்மைத்துவத்தை சிதைத்து ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கேள்விக்குறியாக்கிவிடும். ●




தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கரூர் மாவட்டச் செயலாளர் தோழர். கே.சக்திவேல் அவர்கள் 31.07.2023 அன்று நடந்த பணிநிறைவு பாராட்டு விழாவில் தோழர்கள் கலந்துகொண்டு வாழ்த்தினர்.

# நிலவில் மீண்டும் களம் இறங்கும் சந்திரயான்!

**- தொகுப்பு : சி. ஸ்ரீராமுலு**



இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் ஆய்வுகளின் கண்டுபிடிப்புகள் உலக அளவில் வெற்றிகரமாக பயணித்து தேசத்திற்கு பெருமை சேர்த்து வருகின்றன. அதன் அடுத்த இலக்கு நிலவின் தென் துருவத்தை குறி வைத்திருக்கிறது. இது எதற்காக என்றால்? இதுவரை எந்த ஒரு விண்கலமும் தரையிறங்காத கடினமான பகுதி நிலவின் தென் துருவம். 1960களின் பிற்பகுதியில் அமெரிக்க நிலவு பயணங்கள் நடந்த இடத்திலிருந்து இது மிகவும் வித்தியாசமான இடமாகும். மேலும், வட துருவத்தை விட மிகப்பெரிய நிழல் பகுதிகளை கொண்டது தென் துருவம். நிலவின் மேற்பரப்பில் உள்ள பகுதிகள் நிரந்தர நீர் ஆதாரங்களை கொண்டிருக்கிறது என்பது நமது விஞ்ஞானிகளின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். அத்துடன் பனி மற்றும் பெரிய பள்ளங்களை கொண்டுள்ளதால் தரையிறங்குவதற்கான பகுதியைக் குறிப்பதிலும் சிரமம் உள்ளது. இத்தகைய தடைகளை தகர்த்து நிலவில் தடம் பதிப்பது அவசியமாகிறது. இதன் மூலம் ஆரம்பகால கிரக அமைப்புகளின் மர்மமான பல கேள்விகளுக்கும் விடைகிடைக்கும்

**நிலவில் தண்ணீர்!**

நிலவின் மேற்பரப்பை ஆய்வு செய்ய 2008 ஆம் ஆண்டில் சந்திரயான்-1 விண்கலத்தை (செயற்கைக்கோள்) வெற்றிகரமாக நிலவுக்கு அனுப்பியது இஸ்ரோ. அது நிலவில் தண்ணீர் இருப்பதற்கான ஆதாரங்களை கண்டறிந்து உறுதி செய்தது. இந்த ஆராய்ச்சியை அமெரிக்காவின் நாசா போன்ற மிக முன்னணி விண்வெளி நிறுவனங்கள் கூட வெகுவாகப் பாராட்டின. இதன் தொடர்ச்சியாக, நிலவின் தரையில் இறங்கி ஆய்வு செய்வதற்காக நிலவை சுற்றி வரும் ஆர்பிட்டர், நிலவில்

தரையிறங்கும் விக்ரம் லேண்டர், அதற்குள் பிரக்யான் எனப்படும் ரோவர் ஆகியவற்றை உள்ளடக்கிய நவீன வசதிகள் கொண்ட சந்திரயான் -2 விண் கலத்தை மிகவும் சக்தி வாய்ந்த புவி ஒத்திசைவு வாகனங்களில் ஒன்றான இந்தியாவின் குண்டு பையன், பாகுபலி என்றெல்லாம் செல்லமாக பெயரிடப்பட்ட ஜிஎஸ்எல்வி மார்க் -3 ஏவு கலன் (ராக்கெட்) மூலம் கடந்த 2019 ஜூலை 22இல் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. தென் துருவத்தை ஆராய அனுப்பப்பட்ட முதல் லேண்டர் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

**இமாலய சாதனை!**

இந்த விண்கலத்தில் இருந்து ஆர்பிட்டர் பிரிந்து நிலவைச் சுற்றி வரத் தொடங்கியதும் லேண்டர் பிரிந்து நிலவின் தென் துருவத்தை நோக்கி பயணித்தது. திட்டமிட்டபடி, விக்ரம் லேண்டர் பெரும் சவால்களை எதிர்கொண்டு நிலவில் தரை இறங்கியதும் உலகத்தை தனது பக்கம் திருப்பியது இஸ்ரோ. இந்த நிலையில், நிலவின் தரைப்பகுதியில் இருந்து சுமார் 2.1 கிலோ மீட்டர் உயரத்தில் லேண்டர் திடீரென சிக்னலை துண்டித்துக் கொண்டது. இதன் விளைவு, நிலவின் தரையை தொடுவதற்கு 335 மீட்டர் உயரம் இருந்த நிலையில், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த விண்கலம் அந்த ஆண்டின் செப்டம்பர் மாதம் மெதுவாக தரையிறங்க வேண்டிய நேரத்தில் வேகம் அதிகரித்ததால் 'லேண்டர்' கலன் விபத்தில் சிக்கி செயல் இழந்தது. இந்த நிகழ்வு நமது விஞ்ஞானிகளை வேதனையில் ஆழ்த்தியது. ஆனாலும், விண்கலத்தின் மற்றொரு பகுதியான ஆர்பிட்டர் நிலவின் சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலை நிறுத்தப்பட்டது. இந்தியா மட்டுமின்றி, சமீபத்தில் ஜப்பான் நிலவுக்கு அனுப்பிய விண்கலமும் இறங்காமல் மோதி தோல்வியில் முடிந்தது. நிலவில் விண்கலம் தரை இறங்குவதில் அப்படி என்னதான் பிரச்சனை இருக்கிறது என்ற கேள்வி எழுகிறது.

ஒரு செயற்கைக்கோளை நிலவில் தரை இறக்குவது என்பது விஞ்ஞானிகளுக்கு சாதாரண நிகழ்வல்ல. ஏனென்றால் செயற்கைக் கோள் செல்ல வேண்டிய பாதை உள்ளிட்ட அனைத்தையும் முன்னரே திட்டமிட வேண்டியிருக்கிறது. ஒரு செயற்கைக்கோளின் இன்ஜின்களை குறித்த நேரத்தில் இயக்க வேண்டியுள்ளது. அதற்கு முன்பாக, நேரத்தை துல்லியமாக கணக்கிட்டு பூமியிலிருந்து ஏவுகலன் நொடிப்பொழுதில் புறப்படும்படி திட்டமிட வேண்டும். அத்துடன், செயற்கைக்கோள் நிலவில் தரையிறங்கும் போது குறித்த நேரத்தில், சரியான அளவில் அதன் வேகத்தை குறைக்க வேண்டியது மிக மிக அவசியம். இதில் ஏதாவது ஒரு இடத்தில் சிறு தவறு நடந்தால் கூட அது தோல்வியில் முடிகிறது. சென்சார் செயலிழப்பு, இயந்திர செயலிழப்பு, கணக்கீடு தோல்வி என பல தோல்விகளை சந்தித்துள்ள இஸ்ரோ நிறுவனம், 'தோல்வியே வெற்றிக்கு முதல் படி' என்பதால் சந்திரயான்-2 திட்டத்தில் பின்னடைவு ஏற்பட்டும் இஸ்ரோ விஞ்ஞானிகள் மனம் தளரவில்லை. இதை கற்றல் மற்றும் முன்னேற்றத்திற்கான அடுத்த கட்ட வாய்ப்பாக எடுத்துக் கொண்டு நம்பிக்கையுடன் முயற்சியை தொடர்ந்தனர்.

**சந்திரயான் - 3**

முழுவதும் தோல்வியின் அடிப்படையில், நிலவின் தென்துருவ ஆய்வு பயணத்தை மீண்டும் தொடர்வதற்கு சந்திரயான் -3



"நம்ம தலைவருக்கு இதயத்துல 7 இடத்துல அடைப்பு இருக்காம், சோதனையில கண்டுபிடிச்சிருக்காங்க."

அமலாக்கத்துறை சோதனையிலதானே!"

திட்டத்தை 2020 ஆம் ஆண்டு அறிவித்தது இஸ்ரோ. இந்த லட்சியப் பயணம் பல கட்டமைப்புகள், ஒருங்கிணைப்புகளை உள்ளடக்கியது. முந்தைய பயணத்தின் அனுபவங்களை கணக்கில் எடுத்துக் கொண்டுள்ள இஸ்ரோ, இந்த முறை விண்கலத்தில் பல்வேறு மாற்றங்களை செய்துள்ளது. எவ்வித தொழில் நுட்பக் கோளாறும் ஏற்படாத வகையில் நிலவின் சுற்றுவட்டப் பாதையில் விண்கலம் நுழை வதற்கு தேவையான அனைத்து அம்சங்களும் துல்லியமாக கணக்கிடும் முயற்சிகளை தொடர்ந்துள்ளது.

**நிலவில் எப்படி தரை இறங்கும்?**

நிலவின் மேற்பரப்பில் கரடு முரடான பாதைகளை தவிர்த்து, சமமான ஒரு பகுதியில் லேண்டரை தரையிறக்க வேண்டும். அதன் பின்னர், சுற்றுவட்டப் பாதையில் நிலை நிறுத்தி லேண்டரை பிரித்து இயக்க வேண்டும். அப்போதுதான், ரோவர் இயக்கத்தை நிலவின் மேற்பரப்பில் சோதனைகளை மேற்கொள்ள முடியும். இதற்கான புதிய தொழில்நுட்பங்களை இந்த முறை புகுத்தியுள்ளனர். இதன் மூலம், தரையிறங்கும் இடத்தை சுற்றியுள்ள நில அதிர்வை அளவீடு செய்து அதன் அடர்த்தி மற்றும் மாறுபாடுகளை நாசாவிலிருந்து தொடர்ந்து கண்காணிக்கும் வகையில் வடிவமைத்துள்ளதை இஸ்ரோ தலைவர் சோம்நாத் உறுதி செய்திருக்கிறார். ஏற்கனவே, சந்திரயான் -2 ஆர்பிட்டர் நிலவில் சுற்றி வருவதால் நிலவின் மேற்பரப்பில் பாதுகாப்பாக விண்கலத்தை இறக்குவதற்கு முழுக்க முழுக்க உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட லேண்டர், ரோவர், கலன் களையே அனுப்புகின்றனர். இதனால், கோள்களுக்கு இடையேயான பயணங்களை வெற்றிகரமாக கடந்து ஆர்பிட்டர் வழியாக பூமியுடன் புதிய தொழில் நுட்பத்துடன் தொடர்பு கொள்ளும் வசதிகளை செய்துள்ளனர்.

**நாங்க ரெடி! நீங்க ரெடியா?**

4 மீட்டர் விட்டத்தில், 43.5 மீட்டர் உயரத்தில் நிற்கும் 640 டன் எடையை உயர்த்தும் திறன் கொண்ட, இந்தியாவின் மிக சக்தி வாய்ந்த கிரையோஜனிக் (சிஇ-20) இயந்திரம் பொருந்திய எல்விஎம்- 3 ஏவுகலன் வாகனத்திலிருந்து ஆந்திர மாநிலம் ஸ்ரீ ஹரிகோட்டா சதீஷ் தவான் ஏவுதளத்திலிருந்து ஜூலை 14 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.35 மணிக்கு சந்திரயான்-3 செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்படுகிறது. இதற்கான அனைத்து பாகங்களும் ராக்கெட்டில் பொருத்தப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இதற்கான 48 மணி நேர கவுண்ட் டவுன் துவங்கியது.

**எப்படி செயல்படும்?**

சந்திரயான்- 3 செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தியதும் ஏவுகணையின் உந்து விசை சந்திரனிலிருந்து 100 கிலோ மீட்டருக்கு முன்பு வரை லேண்டரையும் ரோவரையும் எடுத்துச் சென்று விடும். நிலவிலிருந்து 100 கிலோ மீட்டருக்கு மேல் இருக்கும் போது லேண்டர், ரோவர் இரண்டும் உந்துவிசையி லிருந்து வெளியேறும். 1/6 தான் புவி ஈர்ப்பு விசை நிலவில் இருக்கிறது. அதனால் மெதுவாகத்தான் கீழே விழும். லேண்டருக்குள் ரோவர் இருப்பதால் இரண்டும் பிரிந்து போக வாய்ப்பு இல்லை. லேண்டர் கீழே விழும் போது அதன் வேகத்தை பூமியிலிருந்து கட்டுப்படுத்துவது என்பது அவ்வளவு சாதாரணமான விஷயமல்ல. காரணம், பூமியிலிருந்து கொடுக்கப்படும் தகவல்கள் நிலவுக்கு செல்ல சில மணி நேரங்கள் எடுத்துக் கொள்கிறது. அதனால் அவ்வளவு நேரம் லேண்டரால் தாக்குப் பிடிக்க முடியாது. ஆனால், இந்த முறை தானியங்கியாக மட்டுமே செயல்படும் வகையில் வடிவமைத்துள்ளனர். மேலும், தரையில் அதிக வேகத்தில் கீழே விழுந்து நிலவுடன் மோதி சேதமாகாமல் இருப்பதற்கு அனைத்து திசைகளிலும் பயணிக்கும் வகையில் இன்ஜின்களை வடிவமைத் துள்ளனர். விண்கலம் நிலவில் தரையிறங்கும் போது ஒரு நொடிக்கு மூன்று மீட்டர் மட்டுமே இறங்க வேண்டும். இப்படி மெதுவாக தரை இறங்கினால் வெற்றி சாத்தியமாகும். அதற்கு தகுந்தாற் போல் இம்முறை லேண்டரை

வடிவமைத்துள் ளனர். லேண்டர் வெற்றிகரமாக தரையிறங்கிய பின்பு தான் ஆறு சக்கரங்களை கொண்ட ரோவர் வெளியே வரும். இப்படி வெளியே வந்து விட்டால் இந்த திட்டம் வெற்றிகரமாகி விடும். ரோவர் வழக்கமாக நிலவில் சென்று அதன் ஆய்வுகளை மேற்கொள்ள துவங்கிவிடும். பின்னர், ரோவரில் உள்ள பல கேமராக்கள் உதவியுடன் அங்கிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள், மாதிரிகளை ஆய்வு செய்வது உள்ளிட்ட பல்வேறு பணிகளையும் செய்யத் தொடங்கிவிடும். அந்த தகவல்களை பூமிக்கு உடனுக்குடன் அனுப்பி வைக்கும். இது, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வு பயணத்தின் மிக மிக முக்கியமானதாகும். அதற்கான ஆய்வுகள் அனைத்தும் வெற்றிகரமாக முடிந்தது. இரண்டு முறை சோதனை ஓட்டம் நடத்தி முடித்தனர்.

**மீண்டும் ஒரு மைல் கல்...**

சந்திரயான்-3 விண்கலம், அனைத்து வகையிலும் வெற்றிகரமாக திட்டமிடப்பட்டுள்ளது. இருந்தாலும் முறையாக தரையிறங்கா விட்டால் என்ன செய்வது? எரிபொருள் தீர்ந்தால் சமாளிப்பது எப்படி? உள்ளிட்ட அனைத்தையும் விஞ்ஞானிகள் மிகுந்த கவனத்துடன் கையாண்டுள்ளனர். இந்தியாவின் விண்வெளி ஆய்வு முயற்சி களுக்கு இந்த சந்திரயான் -3 திட்டப் பணிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த ஆய்வுப் பணியில் நமது தொழில்நுட்பத் திறன்களை வெளிப்படுத்துவதன் மூலம் இஸ்ரோ உலகளாவிய விண்வெளி சமூகத்தில் ஒரு முக்கிய இடத்தை நிலை நிறுத்தும். இந்தியாவின் விண்வெளித்துறை வரும் ஆண்டுகளில் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் (இந்திய மதிப்பில் ரூ. 65 லட்சம் கோடி) பொருளாதார வளர்ச்சி அடையும் என்பதால் அடுத்தக் கட்டத்திற்கு கொண்டு செல்லும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமே இல்லை. ●

# தேர்தல்கால வாக்குறுதியை நிறைவேற்றக் கோரி தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கம் சார்பில் மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டம்

தேர்தல்கால வாக்குறுதியை நிறைவேற்றக் கோரி தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கம் சார்பில் மாநிலம் முழுவதும் செவ்வாயன்று (ஜூலை 11) ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அதன் ஒருபகுதியாக சென்னை மாநகராட்சி வளாகத்தில் வடசென்னை மாவட்டத் தலைவர் வே.விஜயகுமரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாநிலத் தலைவர் மு.அன்பரசு, தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு மாநில பொதுச்செயலாளர் அண்ணா குபேரன், மாவட்டச் செயலாளர் ம.



அந்தோணிசாமி, பொருளாளர் ஏழுமலை, இணைச்செயலாளர் வி.சிவக்குமார், பகுதிச்செயலாளர் ரவி, செங்கொடி சங்கத்தின் தலைவர் பட்டாபி, பொதுச்செயலாளர் ஸ்ரீனிவாசலு ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர். ●

# காலத்தை வென்ற சிவப்பு கவிஞன் பாப்லோ நெருடா

**- கதிரவன்**



*சிலியின் புரட்சிக் கவிஞர், உலக மகா கவிஞர்களில் ஒருவர் தோழர் பாப்லோ நெருடா. 1904 ஜூலை 12 அன்று பிறந்தவர். சிலி கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர். ஸ்பெயின் உள்நாட்டு யுத்தத்தால் அரசியலில் ஈர்க்கப்பட்ட இவர், பிற்காலத்தில் சிலியில் இடதுசாரி அரசு அமைந்த போது அந்நாட்டின் சார்பில் மெக்சிகோ தூதராக செயலாற்றியவர். கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நாடாளுமன்றத்தின் செனட் சபைக்கு தேர்வு செய்யப்பட்டவர். சிலி மீண்டும் சர்வாதிகாரத்தின் பிடியில் சிக்கிய போது அங்கிருந்து நாடு கடத்தப்பட்டும், தலைமறைவாகவும் சோவியத் ஒன்றியம் உள்ளிட்ட நாடுகளில் தங்கியிருந்தவர். சோவியத் ஒன்றியத்தின் மகத்தான சாதனைகளை பாடலில் வடித்த கவிஞர் பாப்லோ நெருடா, சிலி பாட்டாளி வர்க்கத்தின் துயரங்களை, வேதனைகளை, எழுச்சியை, புரட்சிகர உணர்வுகளை கீதங்களில் வடித்தவர்.*

நான் அவர்களுக்கு நடுவே இருந்தேன்
மக்கள் செங்கொடிகளை
ஊர்வலமாகக் கொண்டு சென்றனர்

கற்களால் தாக்கிய அவர்களுக்கு நடுவே
நான் இருந்தேன்
இடி போன்ற அணிவகுப்பில்
துயரங்கள் ஓங்கி ஒலித்த பாடல்களில்
எப்படிப் படிப்படியாக வென்றார்கள்
என்பதைப் பார்த்தபடி!

அவர்களது எதிர்ப்பு மட்டுமே சாலையாக;
தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்கள்
நொறுங்கிய நட்சத்திரத்தின்
துண்டுகளைப் போல
வாயில்லாதவர்களாக
சோபையிழந்தவர்களாக
ஒன்றிணைந்திருந்தார்கள்
அமைதியாக ஒற்றுமைக்காக

அவர்கள் நெருப்பாக இருந்தார்கள்
அழிக்க முடியாத பாடலாக
பூமியில் மனித இனத்தின்
மெதுவான மாற்றுப் பாதையாக உருவாகினர்

ஆழமாகவும் போராட்டங்களுடனும்
எதுவெல்லாம் மிதித்து அழிக்கப்பட்டதோ
அவற்றுக்காகப் போராட
கௌரவமாக, கிளர்ந்தெழுந்தார்கள்

ஓர் அமைப்பாக ஒழுங்கோடு சென்று
கதவைத் தொட்டு அமர்ந்தார்கள்
நடுக் கூடத்தில் தங்கள் கொடிகளுடன்.

கட்டுரை

# ஒன்றிய அரசின் பாராமுகம்; மாற்றுத்திறனாளிகள் ஆவேசம்!

**– தீக்கதிரோன்**

மாற்றுத்திறனாளிகள் குரலுக்கு செவிமடுக்காமல் 11 ஆண்டுகளாக மாதம் ரூ.300 மட்டும் வழங்கிவரும் ஓய்வூதியத்தை ரூ.5,000 ஆக உயர்த்தி வழங்கிட வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி புது தில்லியில் திங்களன்று (ஜூலை 10) ஆயிரக்கணக்கான மாற்றுத்திற னாளிகள் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். கனிமொழி எம் பி., முன்னாள் ஒன்றிய அமைச்சர் அஜய் மக்கான், ஊனமுற்றோர் உரிமைகளுக்கான தேசிய மேடையின் தலைவர்கள் உள்ளிட்ட பலர் பேசினர். ஒன்றிய பாஜக அரசு இந்திராகாந்தி ஓய்வூதியமாக வழங்கும் மாதம் ரூ.300 என்பதை ரூ.5,000ஆக உயர்த்தி வழங்கிட வேண்டும். மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016ஐ முழுமையாக அமல்படுத்த வேண்டும். பல்நோக்கு அடையாள அட்டையை (யுடிஐடி), முகாம் நடத்தி நாடு முழுவதும் சீராக வழங்க வேண்டும், அதுவரை பயன்கள் பெற யுடிஐடி-யை நிபந்தனை ஆக்கக் கூடாது, 100 நாள் வேலைத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீட்டை அதிகப் படுத்த வேண்டும், தகுதியுடைய மாற்றுத்திறனாளிகள் அனை வருக்கும் பணி வழங்க வேண்டும். வேலை நாட்களை 150 ஆக அதிகரிக்க வேண்டும், உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி புதுதில்லி ஜந்தர்மந்தரில் திங்களன்று ஆயிரக்கணக்கான மாற்றுத் திறனாளிகள் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

என்பிஆர்டி என்னும் ஊனமுற்றோர் உரிமைகளுக்கான தேசிய மேடை சார்பில் நடந்த இப்போராட்டத்தில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, உத்தரப்பிரதேசம், மேற்கு வங்கம், பஞ்சாப்,



ஜம்மு- காஷ்மீர் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து அனைத்து வகை மாற்றுத் திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் பங்கேற்றனர். சங்கத்தின் அகில இந்திய தலைவர் கிரீஷ் கீர்த்தி தலைமை வகித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, முன்னாள் ஒன்றிய அமைச்சர் அஜய் மக்கான், ஊனமுற்றோர் உரிமைகளுக்கான தேசிய மேடையின் செயல் தலைவர் எஸ்.நம்புராஜன், பொருளாளர் கே.ஆர்.சக்கரவர்த்தி, பொதுச்செயலாளர் வி.முரளீதரன், நிர்வாகிகள் ஜான்சிராணி, அனிபென் முகர்ஜி, ரிஷிகேஷ் ரஜளி, அதுவய்யா, கைரளி, அகில இந்திய விவசாயிகள் சங்க மதிப்புறு தலைவர் ஹன்னன் முல்லா, அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்க நிர்வாகி சோனியா, இந்திய மாணவர் சங்க தலைவர் ஆதர்ஷ், மாற்றுத்திற னாளிகள் தேசிய ஒருங்கிணைப்புக்குழு தலைவர் அர்மன் அலி உள்ளிட்டோர் பேசினர். தில்லியில் பெய்து வரும் கனமழையையும் பொருட்படுத்தாமல் ஆயிரக்கணக்கான மாற்றுத்திறனாளிகள் பங்கேற்று முழக்கமிட்டனர். மழை குறுக்கிட்ட போதிலும் நனைந்தபடியும் குடையைப் பிடித்துக்கொண்டும் பங்கேற்றனர். ●

# "விடியலைக் காண்பதற்கு வேறென்ன வழி நமக்கு?"

**- மு.அன்பரசு**

யாரும் செல்ல பயந்த பாதையில் முன்னே சென்ற ஒரு சிலரின் அனுபவத்தைப் பாடமாகக் கொண்டு கரடு முரடான பாதையில் நடந்து சென்று காலில்பட்ட கற்களையெல்லாம் பூக்களாக மாற்றியவர், நாமெல்லாம் தோழர் ஆர்.எம்.எம்.எஸ் என்று அன்போடு அழைக்கின்ற தோழர் ஆர்.எம்.எஸ் என்ற அற்புதத் தோழர் முத்துசுந்தரம்.

ஒரு அரசாங்கம் தன்னுடைய ஊழியர்களுக்கு வழங்கும் சம்பளம் மற்றும் ஓய்வூதியச் செலவினங்கள் அதிகமாக இருப்பதால் அந்த பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டு அரசின் பெரும்பான்மையான துறைகளை தனியார் வசம் ஒப்படைத்து விடும் போக்கு இனி தொடங்கிவிடும் என்று 1990களில் தாராளமய, தனியார்மய. உலகமயக் கொள்கைகள் வருவதற்கு முன்பே அரசு ஊழியர், ஆசிரியர்கள் என அனைத்துத் தரப்பு துறை ஊழியர்களுக்கும் முன்னறிவிப்பு செய்தவர். ஒரு மக்கள் நல அரசாங்கம் மக்கள் நலத் திட்டங்களுக்காக செலவிடும் தொகைகளையும் அதற்காக பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தையும் சுமையாக கருதுவது சமூக அநீதி என பட்டிதொட்டியெல்லாம் முழங்கியவரும் அவரே. அவர் சொன்னதுபோலவே தனியார்மயமும் கார்ப்பரேட் மயமும் இன்று அரசாங்கங்களை ஆட்டுவிப்பதை நாம் பார்க்கிறோம். நம்முடனே இருந்து நம்மையெல்லாம் வழிநடத்தி நாம் நடந்து செல்ல வேண்டிய பாதையை, எதிர்கொள்ள வேண்டிய போரினை, செய்ய வேண்டிய கடமையை அவர் இருந்த காலத்தில் தொடர்ந்து சொல்லிச் சொல்லி நமக்கெல்லாம், நம்முடைய உரிமைகளுக்காகவும் மக்களின் நலன்களுக்காகவும் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடுகிற உத்வேகத்தை தந்தவர் தோழர் ஆர்எம்எஸ் அவர்கள். தான் நோய்வாய்ப்பட்டிருக்கும் காலத்திலும், அரசு ஊழியர்களுக்கான உரிமைகளில் இந்த அரசாங்கங்களின் நிலைப்பாடுகளையும், பொய்யுரைகளையும் நமக்கெல்லாம் விளக்கி, நாமெல்லாம் கடுமையான உரிமைப் போராட்டத்திற்கு நம்மை உட்படுத்திக் கொண்டாலொழிய நம்முடைய உரிமைகளை தக்க வைக்க முடியாது என்று பின்னால் வருவதை முன்கூட்டியே அறிவித்து நம்மை அதற்கு தயார்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்த்தியவர். ஒருபுறம் சமூக நீதி, மக்கள் நலன், ஊழியர் நலனில் அக்கறை, பழைய ஓய்வூதியத்தை மீண்டும் அமல்படுத்துதல் போன்ற வாக்குறுதிகளை மக்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் அளித்துவிட்டு மறுபுறம் கவர்மெண்டை சந்தடியில்லாமல் கார்ப்பரேட் மயமாக்கும் போக்கு துவங்கி விட்டது என அவர் தன் அந்திம காலத்திலும் சொல்லத் தவறவில்லை. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வரலாற்றில் முதல் பாகம் தோழர் எம்.ஆர். அப்பன் என்றால் அதற்கு சற்றும் குறைவில்லாத ஆளுமையும் தோழமையும் கொண்ட வரலாற்றின் இரண்டாம் பாகம் தோழர் ஆம்.எம்.எஸ்.


தோழர் ஆர்.எம்.எஸ்

"தோழர்களே நாம் இழக்கப்போவது அடிமைச் சங்கிலிகளைத்தான் ஆனால் பெறப்போவதென்னவோ ஒரு பேருலகம். நினைவில் கொள்ளுங்கள் இனிமேல் நாம் இழப்பதற்கு ஒன்றுமில்லை. படைக்கப்போவதென்னவோ ஒரு பொன்னுலகம். அதற்காக நாம் ஒவ்வொருவரும் வீறுகொண்டு எழுவோம். உரத்து குரலெழுப்புவோம். உரிமைகளுக்காக போராடுவோம்

போராடிக்கொண்டே இருப்போம்." தோழர் ஆர். எம்.எஸ்-ன் இந்த வார்த்தைகள் ஒலிக்காத கூட்டங்கள் குறைவே.

**சரித்திரம் சுழலும்போதும்**
**சமுத்திரம் குமுறும்போதும்**
**பொறுத்தவன் பொங்கும்போதும்**
**புயல்மழை சீறும்போதும்**
**பறித்தவன் ஆதிக்கத்தைப்**
**பசித்தவன் எதிர்க்கும்போதும்**
**மறித்தவன் வென்றதில்லை**
**மறுப்பவன் நின்றதில்லை.**

என்ற தணிகைச் செல்வன் கவிதையை அவர் உதடுகள் ஒரு நாளைக்கு ஒருமுறையேனும் உச்சரிக்காமல் இருந்ததில்லை.

ஓய்வு, பணித்துறப்பு, இறப்பு மற்றும் பதவி உயர்வுகளால் காலியான பணியிடங்கள் நிரப்பப்படாததாலும், அரசின் பல்வேறு துறைகளிலும் உள்ள அமைச்சுப் பணியாளர்கள் கடுமையான பணிப்பளுவை சுமந்துகொண்டு அல்லல்பட்டு வருவதாலும், சட்டப்படி தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகளை தராமல் நிறுத்திவிட்ட நிகழ்வுகளாலும் ஆட்குறைப்பு, பணியிடக்குறைப்பு, வேலைப்பளு அதிகரிப்பு போன்ற காரணங்களினாலும் அரசு ஊழியர்கள், இருக்கின்ற சில மக்கள் நலத் திட்டங்களையும் முழுமையாக நிறைவேற்றிட முடியாத நிலையில் உள்ளனர். இந்த நிலைமைகளை மாற்ற நாம் தொடர்ந்து போராடிக்கொண்டே இருக்கிறோம். போராட்டங்கள் தொடர்ந்து கொண்டே இருந்தால் அவற்றை அரசாங்கங்கள் புறந்தள்ளிக்கொண்டே இருந்தால் அந்தப் போராட்டங்கள் ஒருநாள் புரட்சியாக மாறும் என்ற தோழர் ஆர்.எம்.எஸ். அவர்களின் கூற்றும் அவருடைய நினைவு நாளில் நம்முடைய நினைவில் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

உறுதியளித்தபடி சத்துணவு ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்காமல் உள்ளது, சிறப்பு காலமுறை ஊதியம் பெறுபவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் நிர்ணயிக்கப்படாமல் உள்ளது, சாலைப்பணியாளர்களின் 41 மாத பணிநீக்கக் காலத்தை பணிவரன்முறை செய்து 41 மாத ஊதிய இழப்பை வழங்கிட வைக்கப்பட்ட கோரிக்கை பரிசீலிக்கப்படாமல் உள்ளது போன்ற நிலுவை கோரிக்கைகள் அரசு ஊழியர்களை கொந்தளிப்பில் ஆழ்த்தியுள்ளது. சரண்விடுப்பு ஒப்புவிப்பு மறு உத்தரவு வரும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது அரசு ஊழியர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி. இவை போக 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை உடனே வழங்குதல், தனியார்மய அரசாணைகளை இரத்து செய்தல், அரசுத்துறையில் அவுட்சோர்சிங் முறை மற்றும் ஆட்குறைப்பு நடவடிக்கைகளை கைவிட வேண்டும், தமிழக அரசுத்துறைகளில் காலியாக உள்ள ஆறு லட்சம் பணியிடங்களை உடனே நிரப்பிட வேண்டும் போன்ற கோரிக்கைகளும் தொடர்ந்து புறந்தள்ளப்பட்டு வருவது அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

நமது இடைவிடாத போராட்டங்கள் இருபதாவது ஆண்டை எட்டியுள்ளது. எத்தனை ஆண்டுகள் ஆனால் என்ன, நம் பொறுமையின் பொருள் என்ன என்பதை அரசாங்கத்திற்கு உணர்த்துவது மட்டும் நம் கடமையல்ல. வரும்காலத்திலே அரசு ஊழியர் சந்ததிகள் நாம் உரிமைகளுக்காக கடுமையாக போராடி வெற்றி பெற்றவர்கள் என்ற வரலாற்றை படிக்க வைக்க வேண்டும். நாம் வாழும் காலத்தில் நம்மை வழி நடத்திய தோழர் ஆர்.எம்.எஸ் அவர்களுடைய பெருங்கனவை நனவாக்கியவர்கள் என்ற பெருமை நம்மையெல்லாம் சேர தோழர் ஆர்.எம்.எஸ். அவர்களின் இந்த நினைவு நாளில் நாம் அனைவரும் உறுதி ஏற்போம். அவருடைய நெஞ்சுரத்துடன், உரிமைகளை முனைப்புடன் பெறுவதற்கான புதிய போராட்டக் களங்களை வடிவமைப்போம். தோழர் ஆர்.எம்.எஸ். அடிக்கடி உரைக்கும் தோழர் தணிகைச் செல்வனின் இந்தப் பாடலை நாம் இந்ந நினைவுநாளின் உறுதிமொழியாக ஏற்பது மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.

**போராடிப் பெற்றவற்றைப்**
**போராடி மீட்க வேண்டும்**
**போராடி மீட்டவற்றைப்**
**போராடிக் காக்க வேண்டும்**
**போராடும் வழியை விட்டால்**
**புதுவாழ்வு என்பதற்கு**
**வேறென்ன வழி உனக்கு**
**விடியலைக் காண்பதற்கு?**

தோழர் ஆர்.எம்.எஸ். நினைவு நாளில் நாம் அவருக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலி அவர் விட்டுச் சென்ற இயக்கப் பணிகளை வெற்றிகரமாக முடித்துக்காட்டுவதே. அதற்கான உறுதியை இந்நாளில் ஏற்போம். அதுவே நாம் தோழர் ஆர்.எம்.எஸ். அவர்களுக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலியாக இருக்கும். ●

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட மையங்கள் நடத்திய ஆர்பாட்டங்கள் மற்றும் கவன ஈர்ப்பு பேரணிகள்

1. மணிப்பூர் மக்களின் மீதான வன்முறைகளை தடுக்க தவறிய ஒன்றிய & மணிப்பூர் மாநில அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் (11.07.2023)

2.தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி கவன ஈர்ப்பு பேரணி - (24.07.2023)

**தர்மபுரி**




புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். அரசுத்துறைகளில் காலியாக இருக்கும் பணியிடங்களை உடனடியாக நிரப்பிட வேண்டும். சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள் எம்.ஆர்.பி. செவிலியர்கள், ஊர்ப்புற நூலகர்கள், கணினி இயக்குபவர்கள், மகளிர் திட்ட ஊழியர்கள், குழந்தைகள் பாதுகாப்பு திட்ட ஊழியர்கள், வன பாதுகாப்பு ஊழியர்கள், கல்வித்துறையில் பணியாற்றும் தொகுப்பூதிய ஊழியர்கள் உள்ளிட்ட தொகுப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் ஊழியர்கள் அனைவரையும் நிரந்தரப்படுத்தி காலமுறை ஊதியம் வழங்கவேண்டும்.

கொரோனா காலத்தில் முடக்கப்பட்ட சரண் விடுப்பு ஒப்புவிப்பை தமிழக அரசு உடனே வழங்க வேண்டும். நிரந்தர பணியிடங்களை அழித்திடும் அரசாணைகள் 115, 139 மற்றும் 152-ஐ உடனடியாகரத்து செய்திட வேண்டும் சாலைப்பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை பணிக்காலமாக மாற்றிட வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளை தர்மபுரி மாவட்ட ஊழியர்கள் வலியுறுத்தி பேரணி நடத்தினர்.

பேரணிக்கு மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார். சிஐடியு மாநில செயலாளர் சி.நாகராசன் பேரணியை துவக்கிவைத்து சிறப்புரையாற்றினார். மாநில துணைத்தலைவர் கோ.பழனியம்மாள் மாவட்ட செயலாளர் ஏ. சேகர் ஆகியோர் சிறப்புரையாற்றினர். ஜாக்டோ ஜியோ மாவட்ட நிதிகாப்பாளர் கே.புகழேந்தி, ஓய்வூதிய அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் M. பெருமாள் நில அளைவை அலுவலர் ஒன்றிப்பின் மாநில செயலாளர் ரா. கல்பனா, மாவட்ட தலைவர் கே.வெங்கட்டேசன் சத்துணவு ஊழியர் சங்க மாநில செயலாளர் பெ.மகேஸ்வரி மாவட்ட தலைவர் சி.காவேரி, பொதுநூலகத்துறை அலுவலர் சங்க மாநிலதலைவர் தீ.சண்முகம், சுகாதார ஆய்வாளர் சங்க மாவட்ட தலைவர் பி.சன்முகம், ஆய்வுகூட நுட்பனர் சங்க மாவட்ட துணைத்தலைவர் வி.முனிராஜா, மருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்க நிர்வாகி சிவமணி வட்ட நிர்வாகிகள் பி.கிருஷ்ணமூர்த்தி ஆர்.முருகன், கே.தேவகி, எம்.ராஜ்கன்னு, எம். திம்மராயன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி கருத்துரையாற்றினர்.

**திண்டுக்கல்**




தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திண்டுக்கல் மாவட்ட மையத்தின் சார்பாக 11.7.23 மாலை 5.30 மணிக்கு ஆர்ப்பாட்டம் மாவட்ட தலைவர் முபாரக் அலி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் விவேகானந்தன் விளக்கவுரை ஆற்றினார். ஜெசி, மாநில செயலாளர், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம், ஜான் பாஸ்டின் டல்லஸ், மாவட்ட தலைவர், வருவாய் துறை அலுவலர் சங்கம், கல்பனா, மாநில செயலாளர், தமிழ்நாடு வேளாண்மை துறை அமைச்சு பணியாளர் சங்கம், ராஜமாணிக்கம், மாநில துணை தலைவர், நெடுஞ்சாலை துறை சாலை பணியாளர் சங்கம்,

ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர், மாநில துணைப் பொதுச் செயலாளர் மங்களபாண்டியன் சிறப்புரை ஆற்றினார், மாவட்ட இணை செயலாளர் மகாலிங்கம் நன்றி கூறினார், 300க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பேரணியில் பங்கேற்றனர். மணிப்பூரில் நடைபெற்ற மனிதநேயமற்ற நடவடிக்கைகளை கண்டித்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற

ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் முபாரக் அலி தலைமையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட மகளிர் துணை குழு அமைப்பாளர் மா.சுகந்தி ஏ.ஜெசி மாநில செயலாளர் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் ஆகியோர் கண்டன உரை ஆற்றினர். மாவட்ட செயலாளர் விவேகானந்தன் நன்றி கூறினார்.

**திருச்சி**




ஜாக்டோ ஜியோ - மூன்று அமைச்சர்கள் பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொண்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி மற்றும் தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி பேரணி 24.07.2023 மாலை 4.30 மணிக்கு வெஸ்ட்ரி பள்ளி ரவுண்டானா முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வரை மாவட்ட தலைவர் முனைவர் கா. பால் பாண்டி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர்கள் சகாதேவன், சிவசங்கர், மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் சத்தியவாணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் பழனிச்சாமி கோரிக்கை விளக்க உரையாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மேனாள் துணைத் தலைவர் பி.வி. சந்திரசேகரன் சிறப்புரையாற்றி பேணியைத் துவக்கி வைத்தார்.தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதிய சங்கத்தின் மாவட்ட தலைவர் சிராஜீதின், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் அல்போன்ஸ், தமிழ்நாடு நெடுஞ்சாலை துறை சாலை பணியாளர்கள் சங்கத்தின் மாவட்ட தலைவர் ஜீவானந்தம், நீதி மன்ற பகுதி குழு செயலாளர் ஆரியகவுண்டன், பெரியசாமி, தமிழ்நாடு அரசு புள்ளிஇயல் சார்நிலை அலுவலர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ராமேஷ்பாபு, மாநகராட்சி பில் கலெக்டர் சங்கத்தின் ராஜலிங்கம், கல்வித்துறை நிர்வாக அலுவலர் சங்கத்தின் வெங்கடேஷ் பாபு, அரசு தொழில் பயிற்சி சங்கத்தின் பால்ராஜ், வட்டக்கிளை நிர்வாகிகள் வரதராஜன், பெர்னத்மேரி, கவியரசர், முகமது சேட், சந்திரா, கிரேஸி சாந்தி, பாரதி, சங்கீதா, மற்றும் துறை வாரி சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினார்கள். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் பெரியசாமி நிறைவுரையாற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் அமுதவல்லி நன்றி கூறினார். பேரணியில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பணியாற்றும் அனைத்து துறை ஊழியர்கள், தோழமை சங்க மாநில, மாவட்ட, வட்டக்கிளை, வளாக கிளை நிர்வாகிகள் மற்றும் முன்னணி ஊழியர்கள் உணர்வு பூர்வமாக கலந்துகொண்டார்கள். 25.07.2023 தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திருச்சிராப்பள்ளி மாவட்ட மையத்தின் சார்பில் மணிப்பூர் மாநிலத்தில் நடைபெற்று வருகின்ற வன்முறைகளை தடுக்க தவறியதையும், பெண்களை இழிவு படுத்தியை செயலையும் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.திருவரம்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், துணை இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் அலுவலகம், நெடுஞ்சாலை துறை அலுவலகம், மணிகண்டம், திருவெறும்பூர், தொட்டியம் மற்றும் தா. பேட்டை ஆகிய ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் முன்பாக எழுச்சியோடு நடைபெற்றன. ஆர்ப்பாட்டத்தில் அனைத்து துறை ஊழியர்களும், அரசு ஊழியர் சங்கத்தின் மாநில, மாவட்ட, வட்டக்கிளை மற்றும் வளாக கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். திருவெறும்பூர் வட்ட கிளையின் சார்பில் வட்ட கிளை தலைவர் சந்திரா தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**திருவாரூர்**




திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டத்தலைவர் வெ.சோமசுந்தரம் தலைமை வகித்தார்,மாவட்ட செயலாளர் செ.பிரகாஷ் கோரிக்கைகளை விளக்கி பேசினார், இதில் மாவட்ட பொருளாளர் எஸ்.செங்குட்டுவன், மாநில செயற்குழு உறுப்பினர். நா.தம்பிதுரை, அனைத்து துறை ஓய்வூதியர் சங்க மாநில செயலாளர் குரு.சந்திரசேகரன் மற்றும் துறை வாரி சங்க மாநில, மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநில செயலாளர்.எம்.சௌந்தரராஜன் நிறைவுரையாற்றினார். ●

# சோசலிசமே மாற்று மற்றதெல்லாம் ஏமாற்று!

**- தோழர் அ.சவுந்தரராசன்**

*சமூக பாதுகாப்புடன் கூடிய வேலையை அடிப்படை உரிமையாக்க வேண்டும், குறைந்தபட்ச ஊதியமாக 26 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி ஆக.1 அன்று தென்சென்னை மாவட்டத்தில், மாநில சிறப்பு மாநாடு நடைபெற்றது. வர்க்க, வெகுஜன அமைப்புகள் இணைந்து உருவாக்கியுள்ள 'சமூக பாதுகாப்புடன் கூடிய வேலைக்கான இயக்கம்' (மெஸ்) இந்த மாநாட்டை நடத்தியது. இதனையொட்டி நடைபெற்ற கருத்தரங்கில் 'தொழிற்துறையும் சென்னைக்கான வேலைவாய்ப்பு உருவாக்கமும்' எனும் தலைப்பில் சிஐடியு மாநிலத் தலைவர் அ.சவுந்தரராசன் ஆற்றிய உரையின் சுருக்கம்:*



வேலை தருவது அரசின் கடமை; பொறுப்பு. ஆனால் இந்தியாவில், தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பு சுருங்கி வருகிறது. இராஜபாளையத்தில் உள்ள 700 நூற்பாலைகளில் 150 ஆலைகள் நலிவடைந்து மூடுகிற நிலையில் உள்ளன. 30 ஆயிரம் பேர் வேலை இழந்துள்ளனர். திருப்பூரில் ஒவ்வொரு ஆலையின் வாயிலிலும் 'ஆட்கள் தேவை' என்று அறிவிப்பு பலகை தொங்கும். தற்சமயம் அவை அனைத்தும் அகற்றப்பட்டுவிட்டன. திருப்பூரில் மையப்பகுதியில் உள்ள ஒரு டீக்கடையில் தினசரி 55 லிட்டர் பால் வைத்து வியாபாரம் செய்தனர். தற்போது, அதிகபட்சமாக 20 லிட்டர் பால்-தான் செல வாகிறது. அதாவது, டீ குடிப்போரின் எண்ணிக்கை அல்லது குடிக்கும் அளவு குறைந்து விட்டது. சென்னை டீக்கடைகளிலும் 40 விழுக்காடு வரை வியாபாரம் குறைந்துள்ளது.

தமிழகத்தில் உள்ள நூற்பாலைகள் அனைத்தும் மூடும் நிலைக்கு வந்துவிட்ட தாக உற்பத்தியாளர்கள் கூறுகிறார்கள். பருத்தி இறக்குமதிக்கு புதிதாக ஒன்றிய அரசு 11 விழுக்காடு வரிவிதித்துள்ளது. அதை திரும்பப் பெற வேண்டும் என்று முதலமைச்சர் ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார். கடுமையாக உயர்த்தப்பட்டுள்ள மின் கட்டணத்தை மாநில அரசு ரத்து செய்ய வேண்டும் என்று ஆலை உரிமையாளர்கள் முதலமைச்சரிடம் கோரியுள்ளார்கள். இந்த தொழில் நெருக்கடிக்கு என்ன தீர்வு?

**முதலாளித்துவ நெருக்கடி**

இன்றுள்ள பொருளாதார நெருக்கடி உலகளாவியது. ஐரோப்பாவின் பல நாடு களில்

கடுமையான பொருளாதார மந்தம் நிலவுகிறது. மக்களிடம் வாங்கும் சக்தி குறைந்துவிட்டது. உக்ரைன் போருக்குப் பிறகு மேலும் குறைந்துவிட்டது. இதனால் துணி வாங்குவதும் குறைந்து விட்டது. ஐரோப்பாவில் வாங்கும் சக்தி அதிகரித் தால்தான் இராஜபாளையம், கோவை, திருப்பூர் போன்ற இடங்களில் உள்ள ஆலை களில் உற்பத்தி பெருகும் என்று உற்பத்தி யாளர்கள் கூறுகின்றனர்.

முதலாளித்துவ கட்டமைப்பில் பொருளா தார நெருக்கடி பலமுறை வந்துள்ளது; பிறகு மாறியுள்ளது. ஆனால், 2008ல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நீண்ட காலமாக நீடிக்கிறது. மார்க்சியம் கூறுகிற அடிப்படையான மாறுதலை செய்தால்தான் பொருளாதார மந்தத்திலிருந்து மீள முடியும். முதலாளித்துவத்தின் அடிப்படை லாபம். லாபத்தை பெருக்க கடுமையான விலையேற்றம் செய்கின்றனர். உற்பத்தி யை அதிகரிக்க தொழிலாளர்களின் எண் ணிக்கையை குறைக்க எந்திரங்கள், தகவல் தொழில் நுட்பங்களை பயன்படுத்து கின்றனர். இதனால் முதலாளிகளுக்கு லாபம் பெருகுகிறது. மறுபுறம் வேலையிழப்பு, வருமான இழப்பு ஏற்பட்டு, மக்களின் வாங்கும் சக்தி குறைகிறது. பொருட்கள் விற்பனையாகவில்லை. இதனால் உற்பத்தி முடங்குகிறது. ஆலைகள் இயங்காது. இந்த சக்கரத்தில் முதலாளித்துவம் சிக்கிக் கொண்டுள்ளது. இதுதான் இன்றைக்கு இந்தியாவின் நிலையும்.

**ஆய்வுகளைக் கைவிட்ட மோடி அரசு**

கடந்த 9 ஆண்டுகளில், அனைத்து குறியீடு களிலும் இந்தியா மிகவும் பின்தங்கியுள்ளது. 2019-20 தேசிய மாதிரி கணக்கெடுப்பின்படி, பெண்களில் 56 விழுக்காட்டினரும், 5வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் 47 விழுக்காட்டினரும் இரத்தசோகையால் பீடிக்கப்பட்டிருந்தனர். ஆட்சிக்கு அவப்பெயர் என்று பிரதமர் இந்த கணக்கெடுப்பையே நிறுத்திவிட்டார். இப்படியாக அடிப்படையான கணக்கெடுப்புகளைக் கூட ஒன்றிய அரசு நிறுத்திவிட்டது.

**காண்ட்ராக்ட் எனும் தீண்டாமை**

பேர் நிரந்தர தொழிலாளிகள் என்றால் 2 - 5 பேர் காண்ட்ராக்ட் தொழிலாளர்களாக இருப்பார்கள். அதுகூட உற்பத்தி சாராத பிரி வில்தான் இருப்பார்கள். இன்று, ஒரு ஆலை யில் 10 நிரந்தர தொழிலாளி, 90 காண்ட்ராக்ட் தொழிலாளிகள் உள்ளனர். காண்ராக்ட் தொழிலாளி என்றால் அவர் தொழி லாளியே இல்லை என்றுதான் பொருள் கொள்கின்றனர். உலகம் முழுவதும் காண்ட்ராக்ட், வெளி முகமை (அவுட்சோர்சிங்) முறை செயல் படுத்தப்படுகிறது. கண்ணியமான வேலை, ஊதியம் இல்லை. மனித உரிமையை காலில் போட்டு மிதிக்கின்றனர். உதாரணத்திற்கு ஓசூர் அசோக் லேலண்ட் தொழிற்சாலையில் 2000 ஆயிரம் நிரந்தர தொழிலாளர்களும், 7 ஆயிரம் ஒப்பந்த தொழிலா ளர்களும் உள்ளனர். இருவருக்கும் கேண்டீ னில் தனித்தனி உணவு வழங்கப்படுகிறது. நிரந்தர தொழிலாளிக்கு இலையில் உணவு பறிமாறுகிறார்கள், காண்ட்ராக்ட் தொழி லாளிக்கு பொட்டல உணவு தரு கிறார்கள். நிரந்தர தொழிலாளிக்கு வாரத்தில் 3 நாள் அசைவ உணவு கொடுக்கிறார்கள். காண்ட்ராக்ட் தொழிலாளிக்கு அசைவ உணவே கிடையாது. இது தொழிற்சாலைக் குள் நடைபெறுகிற ஒதுக்கல்; ஒடுக்கல்; தீண்டாமை. இதுதான் தமிழகத்தில் உள்ள 70 விழுக்காட்டிற்கு மேற் பட்ட ஆலைகளில் பணியாற்றும் காண்ட் ராக்ட் தொழிலாளர்களின் நிலையாக உள்ளது. தற்போது பணியில் உள்ளவர்களில் 70 சதவீதம் பேருக்கு சமூக பாதுகாப்பு இல்லை. பணியில் சமூக பாதுகாப்பு என்பது, பணி நியமனம், பணி நிரந்தரம், பணிப்பாதுகாப்பு, ஓய்வூதியம் இவை யெல்லாவற்றையும் உள்ளடக்கியது. காண்ட்ராக்ட் தொழிலாளிக்கு எந்த சமூக பாதுகாப்பும் இல்லை. பொதுத்துறைகளில் பணியாற்றும் தொழிலாளர்களில் பாதி பேருக்குத்தான் சமூக பாதுகாப்பு உள்ளது. அங்கேயும் காண்ட்ராக்ட் முறைவந்து விட்டது. இந்த சுரண்டலை ஒழிக்காமல் புதிய தொழில்கள் வராது. வாங்கும் திறன் அதிகரிக்க வேண்டும், மக்களிடம் வருமானம் பெருகி பணப்புழக்கம் அதிகரிக்க வேண்டும். இது

நடைபெறாமல் புதிய தொழில்கள் வராது. தொழில்தொடங்க உகந்த சூழல் தமிழ் நாட்டில் உள்ளதாக முதலமைச்சர் கூறு கிறார். நிதி மூலதனம் குறைந்த கூலிக்கு, சட்டத்தை மீறினால் அதற்கு இசைவான அரசு எங்குள்ளது என்று தேடிக்கொண்டி ருக்கிறது. இன்றைக்கு வந்துள்ள புதிய தொழிற்சாலைகளில் காண்ட்ராக்ட்டும், அவுட்சோர்சும்தான் அதிகமாக உள்ளது.

**'நாப்ஸ்', 'நீம்' திட்டங்கள்**

பயிற்சியாளர்களை உருவாக்கும் (நேச னல் அப்ரன்டீஸ் புரமோசன் ஸ்கீம் - நாப்ஸ்) திட்டத்தை ஒன்றிய கொண்டு வந்துள்ளது. அதாவது, தொழிலாளிக்கு முதலாளி பயிற்சி கொடுப்பார். அதற்கு அரசு பண உதவி செய்யும் திட்டம். இதன்படி, முதலாளி ஒரு தொழிலாளிக்கு பயிற்சி கொடுத்து உற்பத்தி யை அதிகரித்து, லாபத்தையும் பெருக்கிக் கொள்கிறார். 50 - 60 ஆயிரம் ரூபாய் ஊதி யம் தர வேண்டிய பணியிடத்தில், 7500 ரூபாய் கொடுத்து பயிற்சி தொழிலாளி வாயி லாக முழு உற்பத்தியையும் பெறுகிறார். அடுத்த சில மாதங்களில் பயிற்சி முடிந்த தாக கூறி வேலையிலிருந்து வெளியேற்றப் படுகிறார். இப்படியாக உழைப்பை சுரண்டி கொள்ளையடிக்கிறார்கள். தற்போது நாப்ஸ் திட்டத்தை வைத்தே முதலாளிகள் ஆலை யை நடத்துகின்றனர். புதிய வேலைவாய்ப்பு இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஒன்றிய அரசு முடிவெடுத்துவிட்டது. அதை மாநில அரசுகளும் அமலாக்குகின்றன. 'நீம்' என்ற ஒரு திட்டத்தை வைத்துள்ளனர். டிவிஎஸ் கம்பெனி முழுவதும் பயிற்சி தொழிலாளர்கள்தான் (அப்ரன்டீஸ்) உள்ள னர். ஒன்றிய மாநில அரசுகள் இணைந்து நடத்தும் என்டிபிஎல் நிறுவனத்தில் நிரந்தர தொழிலாளி ஒருவர் கூட கிடையாது. காமராஜர் துறைமுகத்தில் நிரந்தர தொழிலாளியாக 5 பேர் மட்டுமே உள்ளனர். இளைஞர்களுக்கு கண்ணியமான வேலை, கவுரவமான சம்பளம் கிடைக்க வில்லை. உயிர்வாழ, பிளாட்பார்ம் தொழிலாளர்களாக லட்சக்கணக்கானோர் ஸ்விகி, ஓலா போன்ற நிறுவனங்களில் பணியாற்றுகின்றனர். செயலிகள் வாயிலாக பணியாற்றும் எல்லோரும் பிளாட்பார்ம் தொழி லாளர்கள்தான். இவர்களை தொழிலா ளர்களாகவே அங்கீகரிக்க மறுக்கின்றனர். இந்த தொழிலாளி வேலைசெய்வதால், அதன் பலன் யாருக்கு செல்கிறதோ அவன் தான் முதலாளி. முறைசாரா தொழிலாளர்களுக்கு, புலம்பெயர் தொழிலாளர்கள் வாயிலாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குறைந்த கூலி கொடுத்து அவர்களை சுரண்டுகின்றனர். ஒரே நிறுவனத்தில் நிறைவான கூலி உள்ளவரும், குறைவான கூலி உள்ள வரும் இருந்தால், நிறைவான கூலி பெறுபவர் வெகுசீக்கிரம் அங்கிருந்து வெளியேற்றப்படுவார். கருப்பு இனத்தவரும், வெள்ளை இனத்தவரும் ஒரே ஆலைக்குள் இருந்தால், வெள்ளை இனத்தவர், கருப்பினத்தவருக்காக போராட வேண்டும் என்றார் மார்க்ஸ். எனவே, புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைக்காகவும் குரல் கொடுக்க வேண்டும். உள்ளாட்சியில் ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு அளவுகளில் கூலி நிர்ணயிக்கின் றனர். 5 வருடத்திற்கு முன்பு குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்கப்பட்டது.

அப்போது ஊராட்சி தொழிலாளிக்கு 6 ஆயிரம் ரூபாய் அடிப்படை சம்பளம் தீர்மானிக்கப்பட்டது. 2023ம் ஆண்டிலிருந்து அதை 5 ஆயிரம் ரூபாய் என்று அரசாணை போட்டுள்ளனர். வேலையும் சம்பளமும் மட்டுமின்றி சமூக பாதுகாப்பு முக்கியமானது. இதற்கான சித்தாந்தத்தை, இடதுசாரி மாற்றை மக்களிடம் கொண்டு செல்வோம். சோசலிசமே மாற்று மற்றதெல்லாம் ஏமாற்று என்பதை உணர வைப்போம். ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com